Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, MARCH 15, 2023

புதன்கிழமை மார்ச் 15, 2023 | ஒளி: 08 கதிர்: 229 | பக்கம்:07 | நகரப்பதிப்பு★ | FREE

## ரூபாயின் பெறுமதி மீண்டும் வீழ்ச்சி

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி, செவ்வாய்க்கிழமை (14) வீழ்ச்சியடைந்துள்ளமையை இலங்கை மத்திய வங்கியின் தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

அமெரிக்க டொலரின் கொள்வனவு பெறுமதி 319 ரூபாய் 84 சதமாகவும் விற்பனை பெறுமதி 335 ரூபா 68 சதமாகவும் பதிவாகியுள்ளது.

தொடர்ச்சி P2



# துரோகம் வேண்டாம்

### தொழிற்சங்கங்களிடம் அமைச்சர் பந்துல வேண்டுகோள்

எதிர்பார்க்கப்படும் பொருளாதார அபிவிருத்தியின் பலன்களை, அரசாங்கம் அடுத்த சில மாதங்களில் பொதுமக்களுக்கு முழுமையாக வழங்கும் என்றும் இந்தக் கடினமான நேரத்தில் நியாயமற்ற கோரிக்கைகளை கோருவதன் மூலம் துரோகச் செயல்களில் ஈடுபட வேண்டாம் என்றும் வேலைநிறுத்தத்தில் ஈடுபடும் தொழிற்சங்கங்களிடம் அமைச்சரவைப் பேச்சாளரும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சருமான கலாநிதி பந்துல குணவர்த்தன வேண்டுகோள் விடுத்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில், செவ்வாய்க்கிழமை (14) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் அமைச்சர் மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## பேச்சுவார்த்தை தோல்வி:
### இன்று வேலைநிறுத்தம்

பல தொழிற்சங்கங்களால், புதன்கிழமை (15) நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட வேலைநிறுத்தம் மற்றும் போராட்டங்களை நிறுத்துவதற்கு அராங்கத்தின் சிரேஷ்ட அதிகாரிகளுக்கும், தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கும் இடையே திங்கட்கிழமை (14) இரவு நடத்தப்பட்ட பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்தது.

இந்நிலையில், அரசாங்கத்தால் எந்தவொரு தீர்வும் வழங்கப்படாமையால் திட்டமிட்டபடி வேலை நிறுத்தம் மற்றும் போராட்டங்களை நடத்துவதற்கு தொழிற்சங்கங்கள் தீர்மானித்துள்ளதாக தெரியவருகிறது.

வரிகளைக் குறைத்தல் உள்ளிட்ட நிலுவையில் உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கில், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, திறைசேரியின் சிரேஷ்ட அதிகாரிகளை தொழிற்சங்கப் பிரதிநிதிகள் சந்தித்து கலந்துரையாடினர்.

தொடர்ச்சி P2

## தமிழக மீனவர்களை விரைவாக விடுவிக்கவும்
### பிரதமர் மோடிக்கு ஸ்டாலின் கடிதம்



இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 16 தமிழக மீனவர்களையும் விரைவாக விடுவிப்பதற்காக, தூதரக ரீதியில் நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் நரேந்திர மோடிக்கு, முதலமைச்சர் மு.க ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

தொடர்ச்சி P2



## ரயில்வே ஊழியர்களின் விடுமுறைகள் ரத்து

செவ்வாய்க்கிழமை (14) நள்ளிரவு முதல் வேலை நிறுத்ததில் ஈடுபடவுள்ளதாக ரயில்வே தொழிற்சங்கங்கள் அறிவித்த நிலையில், ரயில்வே திணைக்களத்தின் அனைத்து ஊழியர்களின் விடுமுறைகளும் உடன் அமுலுக்கு வரும் வகையில் போக்குவரத்து அமைச்சு இரத்து செய்தது.

தொடர்ச்சி P2

## தேசிய பௌதீகத் திட்டம் ஏப்ரலில் சமர்ப்பிக்கப்படும்

தேசிய பௌதீகத் திட்டம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் இறுதி ஒப்புதலுக்காக ஏப்ரல் மாதம் சமர்ப்பிக்கப்படும் என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## சின்னத் தேர்தலை நடத்துமாறு மனு

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடத்துமாறு உத்தரவிடக் கோரி, தேசிய மக்கள் சக்தியால், உயர்நீதிமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (14) அடிப்படை உரிமைகள் மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டது.

தொடர்ச்சி P2

## ஷாப்டரின் வழக்கு ஒத்திவைப்பு



பிரபல தொழிலதிபர் தினேஷ் ஷாப்டரின் மரணம் தொடர்பிலான நீதவான் விசாரணையை கொழும்பு பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ், மார்ச் 22 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

பிரேத பரிசோதனை குறித்து, நீதவான் விசாரணைகளை நடத்தும் நிரந்தர நீதவான் ஆஜராகாத காரணத்தால் வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

ஷாப்டரின் மரணத்துக்கான காரணத்தைக் கண்டறிவதற்காக தடயவியல் நிபுணர்கள் மற்றும் இரு சட்ட வைத்திய அதிகாரிகளைக் கொண்ட ஐவர் அடங்கிய விசாரணைக் குழுவை, கொழும்பு மேலதிக நீதவான் ரஜீந்திர ஜயசூரிய கடந்த 27ஆம் திகதி நியமித்திருந்தார்.

தொடர்ச்சி P2

## மயானத்தை சுற்றி மதில் கட்டுவதில் களேபரம்
### பணிகள் இடைநிறுத்தம்



■ எம்.றொசாந்த், எஸ் தில்லைநாதன்

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பகுதியில் மயானத்தைச் சுற்றி மதில் கட்டும் பணி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

பருத்தித்துறை உதவி பொலிஸ் அத்தியட்சகர் தென்னக்கோன் தலைமையிலான குழுவினர், நாகர் கோவில் கிழக்கு மக்களுடன் கலந்துரையாடியதை அடுத்து, பணிகளை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

பிரதேச செயலர், பிரதேச செயலகம், நாகர்கோவில் கிழக்கு, மேற்கு மக்கள் அனைவரும் ஒன்று கூடி இதற்கு ஒரு நிரந்த தீர்மானம் எடுப்பதாக இணங்கியதன் அடிப்படையிலேயே குறித்த பிரச்சினை தற்காலிக முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

மேலும், பொலிஸார் மேற்கொண்ட தாக்குதல், துப்பாக்கி பிரயோகம் தொடர்பில் உரியவர்கள் பருத்தித்துறை உதவி பொலிஸ் அத்தியட்சகர் விசாரணைகளை மேற்கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்வதாகவும் உறுதியளித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## மைத்திரியின் மனுவை விசாரிக்க தீர்மானம்
### 5 சிரேஷ்ட நீதியரசர்களை நியமிக்க நடவடிக்கை



ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பில், தமக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட தனிப்பட்ட முறைப்பாட்டை இரத்து செய்யுமாறு கோரி முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தாக்கல் செய்த ரிட் மனுவை ஐவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம், செவ்வாய்க்கிழமை (14) தீர்மானித்தது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதியரசர் நிஷங்க பந்துல கருணாரத்ன, ஏ. மரிக்கார் ஆகியோர் அடங்கிய அமர்வில் மனு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, ஐவரடங்கிய நீதியரசர்கள் குழாமுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றின் சிரேஷ்ட நீதியரசர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று, நீதியரசர் நிஷங்க பந்துல கருணாரத்ன அறிவித்தார்.

ரிட் மனு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு இறுதித் தீர்மானம் அறிவிக்கப்படும் வரை கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் உள்ள வழக்கை அழைக்க வேண்டாம் என்றும் நீதியரசர், கோட்டை நீதவானுக்கு உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2

## சரணடைந்தார் விமல்: பிடியாணை வாபஸ்

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் எம்.பியுமான விமல் வீரவன்ச, தனது சட்டத்தரணி ஊடாக நகர்த்தல் பத்திரமொன்றை தாக்கல் செய்து நீதிமன்றத்தில் சரணடைந்ததை அடுத்து, அவரை கைது செய்யுமாறு பிறப்பித்த பிடியாணையை மீளப்பெற்றுக் கொள்ளுமாறு கொழும்பு பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ், செவ்வாய்க்கிழமை (14) உத்தரவிட்டார்.



கறுவாத் தோட்டம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தொடர்பில் திங்கட்கிழமை (13) நீதிமன்றில் முன்னிலையாகாத காரணத்தால் விமல் எம்.பியை கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

இந்நிலையில், விமல் எம்.பி, நீதிமன்றத்தில் சரணடைந்ததை அடுத்து, மேற்குறிப்பிட்ட உத்தரவைப் பிறப்பித்த நீதவான், வழக்கு விசாரணையை ஜூன் 19ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகர் ஷெய்ட் ராட் அல் ஹுசைனின் இலங்கை விஜயத்தை எதிர்த்து, 2016ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 6ஆம் திகதி, கொழும்பு - 07, பௌத்தாலோக மாவத்தையிலுள்ள ஐக்கிய நாடுகளின் அலுவலகத்துக்கு முன்னால், விமல் எம்.பி உட்பட குழுவினரால், போராட்டம் நடத்தப்பட்டது.

தொடர்ச்சி P2

மருத்துவப் பயிற்சிகளுக்கான

## மருத்துவப் பயிற்சிகளுக்கான
## வைத்தியசாலைகளை இனங்காண குழு நியமனம்



அரச பல்கலைக்கழக மருத்துவ மாணவர்களின் மருத்துவப் பயிற்சிக்கு இடையூறு ஏற்படாத வகையில், ஏனைய பல்கலைக்கழக மருத்துவ மாணவர்களுக்கு மருத்துவப் பயிற்சிகளை வழங்குவதற்காக, போதனா வைத்தியசாலைகளாகப் பயன்படுத்துவதற்கு பொருத்தமான அரச வைத்தியசாலைகளை இனங்காண்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, குழுவொன்றை நியமித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## தபால் அத்தியாவசியம்



அத்தியாவசிய பொதுச்சேவை சட்டத்தின் கீழ், ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, தபால் சேவையை அத்தியாவசிய சேவையாக அறிவித்து அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## தனியார் பஸ்கள் ஆதரவு இல்லை



வரி அதிகரிப்புக்கு எதிராக இன்று (15) இடம்பெறவுள்ள வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு தனியார் பஸ்கள் ஆதரவு வழங்காது என்று தெரிவித்த அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன, போக்குவரத்துக்கு எவ்வித இடையூறும் ஏற்படாது என்று உறுதியளித்தார்.

பாடசாலைகள், அலுவலகங்களுக்கான சேவைகளும், ஏனைய சேவைகள் வழமை போன்று இடம்பெறும் எனவும் அந்தச் சேவைகளை நடத்துவதற்கு போதிய பஸ்கள் இல்லையெனின் மேலதிக பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும் என்று குறிப்பிட்டார்.

வேலைநிறுத்தத்தில் ஈடுபடும் ஊழியர்களுக்கு சம்பளம் கிடைக்கும் என்றும் பஸ்கள் வேலைநிறுத்தம் செய்தால், அந்த ஊழியர்கள் பட்டினி கிடக்க நேரிடும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எதிர்வரும் தமிழ், சிங்கள புத்தாண்டு காலம் வரை பஸ் சேவைகளை தடையின்றி முன்னெடுக்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

PAGE 1 தொடர்ச்சிகள்

# துரோகம் வேண்டாம்

தொழிற்சங்கங்களின் சில பிரிவினரால் தொடங்கப்பட்டுள்ள வேலைநிறுத்தத்தின் முக்கிய நோக்கம், கோரிக்கைகளை வென்றெடுப்பது அல்ல; சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கிடைக்கவிருக்கும் 2.9 பில்லியன் அமெரிக்க டொலரை பெறுவதற்கான திட்டத்தை நாசப்படுத்துவதே என்றார்.

மார்ச் 20ஆம் திகதி சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை கூடி அங்கிகாரம் வழங்க உள்ளதாகவும் அந்த செயல்முறையை நாசமாக்குவதை நாங்கள் அனுமதிக்க முடியாது என்றும் தெரிவித்த அவர், பொருளாதாரத்தின் மறுமலர்ச்சியின் முதல் மற்றும் முதன்மையான பயனாளிகள் அரச ஊழியர்களே என்றும் சுட்டிக்காட்டினார்.

பல சேவைகளை அத்தியாவசிய சேவைகளாக அரசாங்கம் அறிவித்துள்ளது என்றும் சட்டத்தை மீறினால், சட்டத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

2.9 பில்லியன் அமெரிக்க டொலர் முதல் தவணையை வெளியிட்ட பின்னர், ஆசிய அபிவிருத்தி வங்கி, ஜெய்க்கா, உலக வங்கி ஆகியவற்றிலிருந்து மேலும் நிதி உதவியை அரசாங்கம் எதிர்பார்க்கிறது என்றும் வெளிநாட்டு இருப்புகளை கிட்டத்தட்ட 10 பில்லியன் அமெரிக்க டொலராக உயர்த்தும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இது ரூபாயின் மதிப்பை மேலும் அதிகரிப்பதற்கும், உலக நிதி நிறுவனங்கள், கடன் வழங்குபவர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் மத்தியில் இலங்கை மீதான நம்பிக்கையை மேம்படுத்துவதற்கும் உதவும் என்றும் குறிப்பிட்டார்.

## பேச்சுவார்த்தை தோல்வி...

அதன்போது, பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதியிடம் தெரிவிக்கப்படும் என்றும், அதற்கான பதில் உடன் வழங்கப்படும் என்றும் அதிகாரிகள் உறுதியளித்ததாக தொழிற்சங்க பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும், சாதகமான பதில் கிடைக்கும் வரையில் தற்போதைய மற்றும் இன்று (14) புதன்கிழமை முன்னெடுக்கப்படவுள்ள வேலைநிறுத்தப் போராட்டத்தைக் கைவிடத் தயாராக இல்லை என்று அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று (14) மாலை முதல் தபால் ஊழியர்கள் வேலைநிறுத்த போராட்டத்தை ஆரம்பித்துள்ள அதேவேளை, ரயில்வே ஊழியர்கள் நள்ளிரவு முதல் வேலைநிறுத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர். துறைமுகங்கள், பெற்றோலியம், கல்வி, மின்சார சபை ஆகிய அரச நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கங்கள் உட்பட பல தொழிற்சங்கங்களும் இன்று காலை வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளன.

## ரூபாயின் பெறுமதி மீண்டும் வீழ்ச்சி

மார்ச் மாதம் 1ஆம் திகதியில் இருந்து அமெரிக்க டொலரின் பெறுமதி சரிந்து வந்த நிலையில், வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிரான இலங்கை ரூபாயின் மதிப்பு உயர்ந்தது.

எனினும், கடந்த வெள்ளிக்கிழமை (10) முதல் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் மதிப்பு மீண்டும் சரிந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ரயில்வே ஊழியர்களின்...

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சால் செவ்வாய்க்கிழமை (14) வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பெப்ரவரி மாதம் 27ஆம் திகதி ஜனாதிபதியால் வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம், 1979 ஆம் ஆண்டு 61 ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச் சேவைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் ரயில் சேவைகள் அத்தியாவசிய சேவையாக பிரகடனப்பட்டுத்தப்பட்டு உள்ளது.

அதற்கமைய, தொடர்ச்சியான மற்றும் வினைத்திறனான சேவையை பேணுவதற்காக, மார்ச் 14ஆம் திகதி முதல் அமலாகும் வகையில் ஊழியர்களின் விடுமுறையை ரயில்வே திணைக்களத்தின் பொது முகாமையாளர் டபிள்யூ.ஏ.டி.எஸ் குணசிங்க இரத்துச் செய்துள்ளார் என்று அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இன்றையதினம் (15) கடமைக்கு சமூகமளிக்காத அனைத்து ஊழியர்களிடமும் அது தொடர்பான அறிக்கையை கோருமாறு அனைத்து திணைக்கள தலைவர்களுக்கும் பொது முகாமையாளர் பணிப்புரை விடுத்துள்ளார்.

## தேசிய பௌதீகத் திட்டம் ஏப்ரலில் சமர்ப்பிக்கப்படும்

'தேசிய பௌதீக திட்டம்-2048' தயாரிப்பது தொடர்பாக பத்தரமுல்லை, செத்சிறிபாயவிலுள்ள தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்கள கேட்போர் கூடத்தில் செவ்வாய்க்கிழமை (14) நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்ட அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

ஜனாதிபதியின் அனுமதி கிடைத்த பின்னர், தேசிய பௌதீக திட்டம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு அமைச்சரவை அங்கிகாரம் பெற்றுக்கொள்ளப்படும் என்றும் அது வர்த்தமானியில் வெளியிடப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் தேசிய பௌதீகத் திட்டம் பாராளுமன்றம் மற்றும் பாராளுமன்றத்தின் அமைச்சின் ஆலோசனைக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

முதலாவதாக, இந்நாட்டில் 2007 இல் தேசிய பௌதீகத் திட்டம் தயாரிக்கப்பட்டது. பின்னர் அது 2019 இல் புதுப்பிக்கப்பட்டது. தேசிய பௌதீகத் திட்டம் - 2048இன் கருப்பொருள் 'ஒரு திட்டமிடப்பட்ட நிலை பேறான வளமான தேசம்' என்பதாகும்.

தேசிய பௌதீகத் திட்டங்கள் பல்வேறு துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அறிஞர்களின் கருத்துகள் மற்றும் பரிந்துரைகளை எடுத்துக்கொண்டு தயாரிக்கப்படுகின்றன. தற்போது தயாரிக்கப்பட்டு வரும் தேசிய பௌதீகத் திட்டம், அமைச்சின் செயலாளர்கள் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டு அவர்களின் கருத்துகள் மற்றும் ஆலோசனைகள் பெறப்பட்டுள்ளன.

இந்தத் தேசிய பௌதீக திட்டம் தற்காலத்திற்கு ஏற்றவாறு புதுப்பிக்கப்பட வேண்டுமெனவும் புதுப்பித்தலுக்காக குறிப்பிட்ட காலக்கெடுவை அமைக்கவும் அமைச்சர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

அபிவிருத்தித் திட்டங்களில் ஈடுபடும் நிறுவனங்களை ஒருங்கிணைப்பதில் தாமதம் ஏற்படுவதால், அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்துவதில் தாமதம் ஏற்படுவதுடன், பொதுமக்களும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

மேலும், அரசாங்கம் மாறும்போது, தேசிய திட்டங்களில் ஏற்படும் மாற்றம், நாட்டின் வளர்ச்சிக்கு தடையாக உள்ளது.

எவ்வாறாயினும், தேசிய பௌதீக திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் திட்டங்களை அமல்படுத்துவதன் மூலம் அபிவிருத்தி திட்டங்கள் மிகவும் பயனுள்ளதாக அமையும் எனவும் மக்களின் தேவைகள் நிவர்த்தி செய்யப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

## மயானத்தை சுற்றி மதில் கட்டுவதில் களேபரம்

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, நாகர்கோவில் பகுதியில் மயானம் ஒன்றினை சுற்றி, மதில் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை (14) இடம்பெற இருந்தது.

இந்நிலையில், மதில் கட்டுவது தொடர்பில் இரு தரப்பினருக்கு இடையில் திங்கட்கிழமை முரண்பாடு ஏற்பட்டு, மதில் கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்த புலம்பெயர்ந்து வாழும் நபர் ஒருவர் மீது ஊரில் வைத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதலில் காயமடைந்த நபர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அத்துடன் சம்பவம் தொடர்பில் பொலிஸாரிடம் முறையிட்டுள்ளார்.

முறைப்பாட்டின் பிரகாரம் சம்பவ இடத்திற்கு விசாரணைக்காக சென்ற பொலிஸ் குழுவினருக்கும் அப்பகுதி மக்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது. அது பின்னர் கைக்கலப்பாக மாறியுள்ளது.

அதன் போது பொலிஸார் பெண்கள், சிறுவர்கள் என பேதம் பார்க்காமல் அனைவர் மீதும் கடுமையான தடியடி பிரயோகம் மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அதன் போது, துப்பாக்கி சூடுகளும் நடத்தப்பட்டுள்ளன. ஆனால், தாம் துப்பாக்கி சூடு நடத்தவில்லை என பொலிஸ் தரப்பு மறுத்துள்ளது.

துப்பாக்கி சூடு நடத்தப்பட்டு, அப்பகுதிகளில் துப்பாக்கி சன்னங்களின் வெற்றுக்கோதுகள் காணப்படுகின்ற போதிலும், பொலிஸார் தாம் துப்பாக்கி சூடு நடத்தவில்லை என்று தெரிவித்துள்ளனர்.

அவ்வாறாயின் யார் துப்பாக்கி சூடு நடத்தியது எனவும் பொலிஸார் மற்றும் பாதுகாப்பு தரப்பினரை விட வேறு நபர்களிடம் துப்பாக்கி உள்ளனவா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாகவும் , அதனால் தாம் அச்சத்திற்கு உள்ளாகியுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

அதேவேளை அப்பகுதியில் உள்ள முருகமூர்த்தி கோவில் சப்பர கொட்டகைக்கு தீ வைக்கப்பட்டதில், கொட்டகை முற்றாக தீக்கிரையாகியுள்ளது.

## வைத்தியசாலைகளை இனங்காண குழு நியமனம்

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம், வைத்தியர் நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலை, லைசியம் கெம்பஸ் மற்றும் கொழும்பு, களுத்துறை, கம்பஹா, குருநாகல், பொலன்னறுவை ஆகிய பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்படும் மருத்துவ மாணவர்களுக்காக போதனா வைத்தியசாலையாகப் பயன்படுத்துவதற்கு ஏற்ற அரச வைத்தியசாலைகள், ஆய்வு செய்தல், மீளாய்வு செய்தல், இனங்காணல் மற்றும் மருத்துவப் பயிற்சியை வழங்குவதற்கு உள்ள சாத்தியக்கூறுகள் என்பன தொடர்பில் இக்குழு ஆராயவுள்ளது.

இதன்படி, இனங்காணப்படும் வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு அவசியமான நடவடிக்கைகள் தொடர்பில் பரிந்துரைகளை முன்வைக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எட்டு (08) வாரங்களுக்குள் குழுவின் இனங்காணல் மற்றும் பரிந்துரைகள் தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இக்குழுவுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

## சின்னத் தேர்தலை நடத்துமாறு மனு

மேலும், மார்ச் 9ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தாததன் மூலம் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பளிக்கக் கோரியும் குறித்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

திறைசேரி செயலாளர் மஹிந்த சிறிவர்தன, சட்டமா அதிபர், தேசிய தேர்தல் ஆணைக்குழு உள்ளிட்ட சிலர் குறித்த மனுவில் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

மேற்குறிப்பிட்ட மனுவை, கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹதுன்நெத்தி, டொக்டர் நிஹால் ஜயசிங்க ஆகியோர் தாக்கல் செய்துள்ளனர்.

## மைத்திரியின் மனுவை விசாரிக்க தீர்மானம்

முன்னாள் ஜனாதிபதிக்கு எதிராக குற்றவியல் சட்டத்தின் 298 ஆவது பிரிவின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரி, அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ மற்றும் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்ட ஜேசுராஜ் கணேசன் ஆகியோர், கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் தனிப்பட்ட முறைப்பாடு ஒன்றை தாக்கல் செய்திருந்தனர்.

கொலை வரம்பில் வராத மரணம் விளைவிக்கும் குற்றத்துக்கு சமமான கவனமற்ற செயலை செய்து பலரின் உயிரிழப்பை ஏற்படுத்தியத்தியமைக்கு, தாக்குதல் தினத்தன்று பாதுகாப்பு அமைச்சராகவும், சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சராகவும் செயற்பட்ட முன்னாள் ஜனாதிபதியே பொறுப்பு என்று மனுதாரர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான ஏற்கவியலாத சாட்சியங்கள் மற்றும் செவிவழிச் சாட்சியங்களை கருத்திற்கொண்டு நீதவான் நோட்டீஸ் பிறப்பித்திருந்ததாகவும் தனது விருப்புரிமை அதிகாரத்தை சரியாகப் பயன்படுத்த கோட்டை நீதவான் தவறிவிட்டார் என்றும் மைத்திரிபால சிறிசேன தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

## ஷாப்டரின் வழக்கு ஒத்திவைப்பு

தடயவியல் நிபுணரான பேராசிரியர் அசேல மெண்டிஸ் தலைமையில் பேராசிரியர் டி.சி.ஆர். பெரேரா, பேராசிரியர் டி.என்.பி பெர்னாண்டோ, கலாநிதி சிவசுப்ரமணியம், கலாநிதி ருவன்புர ஆகியோர் அடங்கிய விசாரணைக்குழு நியமிக்கப்பட்டது.

பிரேத பரிசோதனை அறிக்கையில் முரண்பாடுகள் இருந்ததால், அதை விரிவாக ஆராய்ந்து, மரணத்துக்கான காரணத்தை மன்றுக்கு சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்ட நீதவான், மேலதிக விசாரணைகள் மார்ச் 14ஆம் திகதி முன்னெடுக்கபடும் என்று உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையில், நீதவான் நேற்றைய தினத்தில் ஆஜராகியிருக்கவில்லை என்பதால், வழக்கின் நீதவான் விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

52 வயதான ஷாப்டர், கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 15 ஆம் திகதி பொரளை பொது மயானத்தில் நிறுத்தப்பட்டிருந்த அவரது காரின் சாரதி ஆசனத்தில், கழுத்தில் கம்பியால் சுற்றப்பட்ட நிலையில் பலத்த காயங்களுடன் மீட்கப்பட்டு, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்திருந்தார்.

## தமிழக மீனவர்களை விரைவாக விடுவிக்கவும்

இந்திய மீனவர்கள் இவ்வாறு இலங்கையைச் சேர்ந்த சிலரால் அல்லது இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுவது கடந்த ஒரு மாதத்துக்குள் நடந்த மூன்றாவது சம்பவம் ஆகும். மீனவர்கள் வாழ்வாதாரத்துக்காக மீன்பிடி தொழிலை மட்டுமே நம்பியுள்ளனர்.

அடிக்கடி நிகழும் இதுபோன்ற சம்பவங்கள் ஏழை மீனவர்களின் வாழ்வாதாரத்தை சிதைத்து அவர்களின் மனதில் அச்ச உணர்வை உருவாக்குகின்றன.

இந்த விவகாரத்தை மாண்புமிகு மத்திய வெளியுறவுத் துறை அமைச்சரின் கவனத்திற்கு ஏற்கெனவே கொண்டு சென்றேன். வெளியுறவுத் துறை அமைச்சரும் இந்த விவகாரத்தை இலங்கை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு சென்றார். இருப்பினும் இதுபோன்ற சம்பவங்கள் தொடர்ந்து நடக்கின்றன.

நமது மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகள் நிரந்தரமாக பாதுகாக்கப்படுவதை உறுதி செய்வதற்கும், இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் இருக்கவும் நீங்கள் (பிரதமர்) உடனடியாக இதில் தலையிடவேண்டும்.

தற்போதைய நிலைவரப்படி, தமிழ்நாடு மீனவர்களின் 102 மீன்பிடிப் படகுகள் இலங்கை வசம் உள்ளன. இலங்கையால் விடுவிக்கப்பட்ட 6 மீன்பிடிப் படகுகள் இன்னும் இந்தியாவிடம் ஒப்படைக்கப்படவில்லை.

இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட 16 மீனவர்களையும், 102 மீன்பிடி படகுகளையும் விரைவில் விடுவித்திட தேவையான தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சரணடைந்தார் விமல்: பிடியாணை வாபஸ்

அனுமதியின்றி ஒலி பெருக்கியைப் பயன்படுத்தியதுடன், வாகன நெரிசலை உண்டாக்கி மக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் கறுவாத் தோட்டம் பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

## தபால் அத்தியாவசியம்

தபால் சேவை தொடர்பில் மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பேணுவதற்கு அரச கூட்டுத்தாபனம் அல்லது அரச திணைக்களம் அல்லது உள்ளூராட்சி நிறுவனம் அல்லது கூட்டுறவுச் சங்கம் அல்லது அதன் கிளைகள் வழங்கும் சேவைகள் இன்றியமையாதவை என்று கருதி குறித்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

காத்தான்குடி நகர சபையால்

# ‘SMART CITY’ திட்டம் அறிமுகம்



■ எம்.எஸ்.எம் நூர்தீன்

காத்தான்குடி நகர சபை எல்லைக்குள் வசிக்கும் பொதுமக்களுக்கான சேவைகளை இலகுவாகவும், விரைவாகவும் வினைத்திறன் மிக்கதாகவும் வழங்கும் நோக்கில், ‘SMART CITY’ (ஸ்மார்ட் சிட்டி) எனும் விசேட திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வு, காத்தான்குடி ஹோட்டல் பீச் வே மண்டபத்தில் நேற்று (14) நடைபெற்றது.

காத்தான்குடி நகர சபை தவிசாளர் எஸ்.எச் அஸ்பர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.பிரகாஷ் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

காத்தான்குடி நகர சபை பொது மக்களுக்கு வழங்கும் அனைத்து சேவைகளையும் டிஜிட்டல் முறையில் உலகில் எப்பாகத்தில் இருந்துகொண்டும் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையிலான இந்த ‘ஸ்மார்ட் சிட்டி’ மென்பொருளை, காத்தான்குடி நகர சபையுடன் இணைந்து, winsoftmax (pvt) Ltd நிறுவனத்தினர் வடிவமைத்துள்ளனர்.

சாய்ந்தமருது

## கடற்கரையில் மர்மப்பொருள்

■ பாறுக் ஷிஹான்



சாய்ந்தமருது பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடற்கரையில் மண்ணில் புதையுண்ட நிலையில் மர்மப்பொருள் ஒன்று இருப்பதாக சாய்ந்தமருது பொலிஸாருக்கு, நேற்று (14) தகவல் வழங்கப்பட்டுள்ளது.

மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் வழங்கிய தகவலுக்கமைய, குறித்த இடத்துக்கு விரைந்த சாய்ந்தமருது பொலிஸார், விசேட அதிரடிப் படையினருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

அங்கு காணப்பட்ட பொருள் மிதிவெடி என சந்தேகிக்கப்பட்ட போதிலும், அப்பொருளை பரிசோதனை செய்த விசேட அதிரடிப் படையினர், அது மிதிவெடி அல்ல எனவும் கேஸ் நிரப்பப்பட்ட பொருள் எனவும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

காரைதீவு மீனவர்களின் தேவைகள்:

## தீர்வு காணும் முயற்சிகள் முன்னெடுப்பு

■ க. விஜயரெத்தினம்

காரைதீவு பிரதேச மீனவர்களின் வாழ்வாதாரம், வாழ்க்கை தரம், வருமானம், பொருளாதாரம் ஆகியவற்றை மேம்படுத்துவது தொடர்பான வேலை திட்டங்களை ஆராய்வதற்கு Cross Ethnic Community மனித நேய தொண்டு ஸ்தாபனம் திங்கட்கிழமை (13)காரைதீவுக்கு கள விஜயம் மேற்கொண்டது.

மேற்படி மனித நேய தொண்டு ஸ்தாபனத்தின் கிழக்கு மாகாண இணைப்பாளர் சதீஸ் நேரில் வருகை தந்து நிலைமைகளை ஆராய்ந்தார். அத்துடன் மீனவர்களின் துன்பங்கள், பிரச்சினைகள், கோரிக்கைகள் ஆகியவற்றை கவனமாக செவிமடுத்தார்.

முதல் கட்டமாக பயனாளிகளை தெரிவு செய்து, மாலை நேர மீன்பிடிக்கான சிறிய ரக தோணிகளை பாவனைக்கு வழங்குவது குறித்து சாதகமாக பரிசீலிப்பதாகவும், கட்டம் கட்டமாக மீனவ உறவுகளின் தேவைகளை நிறைவு செய்து தர முயற்சிப்பதாகவும் இணைப்பாளர் சதீஸ் தெரிவித்தார்.

Cross Ethnic Community மனித நேய தொண்டு ஸ்தாபனம் இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பால் மனித நேயத்தை முன்னிறுத்தி சர்வதேச ரீதியாக தேவை உடைய மக்களுக்கு மகத்தான சேவைகளை ஆற்றி வருகின்றது.

இன பேதங்களை களைந்து, மக்களை இணைப்பது இதன் தூர நோக்கு ஆகும்.

கல்லோயா நீர்ப்பாசனப் பிரிவில்

## விதைப்பு பணிகளை முன்னெடுக்கவும்



■ எம்.எஸ்.எம். ஹனீபா

2023ஆம் ஆண்டுக்கான சிறுபோக நெற்செய்கைக்கான விதைப்புப் பணிகள், இம்மாதம் 20ஆம் திகதி ஆரம்பித்து, ஏப்ரல் மாதம் 15ஆம் திகதிக்குள் நிறைவு செய்ய வேண்டுமென, அம்பாறை மாவட்டச் செயலாளர் அதிபர் ஜே.எம்.ஏ டக்ளஸ் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று நீர்ப்பாசன பொறியியலாளர் பிரிவுக்குட்பட்ட கல்லோயா வலது கரை நீர்ப்பாசனப் பிரிவில் இவ்வாண்டுக்கான சிறுபோக நெற்செய்கைக்கான ஆரம்பக் கூட்டம், அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் நேற்று (14) நடைபெற்றது.

இதில் உரையாற்றிய மாவட்டச் செயலாளர் டக்ளஸ் தெரிவிக்கையில், “இம்முறை அம்பாறை மாவட்டத்தில் 01 இலட்சத்து 35 ஆயிரம் ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது. அத்துடன் 10, 822 ஏக்கரில் கரும்புச் செய்கை மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

“அம்பாறை சேனநாயக்கா சமுத்திரத்தில் 03 இலட்சத்து 61 ஆயிரம் ஏக்கர் சதுர அடி நீர் மட்டம் காணப்படுகின்றது. இதில் கரும்புச் செய்கைக்கு 26,000 ஏக்கர் சதுர அடி நீர் வழங்கப்படவுள்ளது.

“அக்கரைப்பற்று நீர்ப்பாசன பொறியியலாளர் பிரிவில் 24 ஆயிரத்து 10 ஏக்கரில் நெற்செய்கை பண்ணப்படவுள்ளது. ஏனைய பிரதேசங்களில் 95 சதவீதம் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு இருந்தாலும், அக்கரைப்பற்று பிரதேசத்தில் 100 சதவீதம் நெற்செய்கை பண்ண முடியும்.

“அரசாங்கத்தால் மானிய அடிப்படையில் வழங்கப்பட்ட யூரியா உரம் தொடர்ந்தும் வழங்கப்படும்” என்றார்.

அட்டைப்பள்ளம்

## கடலரிப்பு குறித்து விசேட கவனம்



■ பாறுக் ஷிஹான்

நிந்தவூர், அட்டைப்பள்ளம் பிரதேசத்தில் அதிகரித்து வரும் கடலரிப்பு சம்பந்தமாக அப்பிரதேசத்திலுள்ள தோட்ட உரிமையாளர்கள், ஹோட்டல் உரிமாயாளர்கள், மீனவர்கள், பொதுமக்கள் இணைந்து, நிந்தவூர் பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ.எம். தாஹிருடன் கலந்துரையாடலை அண்மையில் முன்னெடுத்துள்ளனர்.

கடலரிப்பால் பாதிக்கப்பட்ட காணி உரிமையாளர்கள் உட்பட பொதுமக்கள் அனைவரும் இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வைப் பெற்றுத் தருமாறு, தவிசாளர் தாஹிரிடம் வேண்டுகோள் முன்வைத்தனர்.

இதன்போது, அட்டைப்பள்ளம் ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில் நிர்வாகத்தினரால் தவிசாளரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.



மன்னார் மாவட்டத்தில்

# சுயதொழிலை மேம்படுத்தல்

■ லெம்பர்ட்



“மன்னார் மாவட்டம் உள்ளடங்கலாக வட மாகாணத்தில் உள்ளவர்களை சுயதொழில் நடவடிக்கைகளில் மேம்படுத்த வேண்டிய கட்டாய சூழ்நிலையில் இருக்கிறோம்” என மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தெரிவித்தார்.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனமும் மாவட்ட கைத்தொழில் அபிவிருத்திச் சபையும் இணைந்து ஏற்பாடு செய்த உற்பத்தி சார் பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சவர்க்காரம், சலவைத்தூள் சார்ந்த குறித்த உற்பத்தி சார் பயிற்சி நெறி, மன்னார் மாவட்ட செயலகத்தில் நேற்று (14) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அவர் மேலும் உரையாற்றுகையில், “இங்கு முதல் கட்டமாக தெரிவுசெய்யப்பட்ட 45 பேருக்கு உற்பத்தி சார் பயிற்சியை வழங்கி வருகின்றோம். பயிற்சியை பெற்றுக்கொள்ளுகின்றவர்கள் பயிற்றுவிப்பாளர்களாகவும் வர வேண்டும்.

“இவ்வாறான ஓர் எதிர்பார்ப்புடன் மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம், வட மாகாணத்தில் மீனவர்கள் மற்றும் விவசாயிகளுடன் கடமையாற்றி வருகின்றது.

“அதிலும் சிறப்பாக தொழில் முயற்சியாளர்களை, அவர்களின் தொழில் முயற்சிகளை ஊக்குவிக்கும் வகையில், நாங்கள் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம்.

“அதன் ஒரு பகுதியாக சுயசார்பு உற்பத்தி குறிப்பாக எங்களுக்குத் தேவையான உற்பத்திகளை எங்களின் வளங்கள் ஊடாக மேற்கொண்டு, அதில் வரும் பயனை, எமது சூழலுக்குள் அதனைப் பயன்படுத்திக் கொள்ளும் செயற்பாடே தற்சார்பு பொருளாதாரமாக உள்ளது.

“மன்னார் மாவட்டத்தில் மீன்பிடி விவசாயத்தை தவிர, உற்பத்தி மையங்கள் இல்லை. தென்னிலங்கையை பார்த்தால் நூற்றுக்கணக்கான தொழிற்சாலைகள் உள்ளன. பல கம்பெனிகள் உள்ளன. அங்கே சென்று வேலை செய்ய முடியும். ஆனால், எங்களுக்கு மாற்று வழி இல்லை.

“எனவே, விரும்பியோ விரும்பாமலோ மன்னார் மாவட்டமாக இருந்தாலும் சரி வடமாகாணத்தில் உள்ளவர்களாக இருந்தாலும் சரி சுயதொழில் நடவடிக்கைகளை மேம்படுத்த வேண்டிய கட்டாய சூழ்நிலையில் இருக்கிறோம்.

“அதன் ஓர் அங்கமே குறித்த சுயதொழில் பயிற்சி. எனவே, உங்களின் சுய தொழில் உற்பத்திகள் உங்கள் கிராமங்கள் ஊடாக விநியோகிக்கப்பட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு” என்றார்.



## மாடுகள் கடத்தல் முறியடிப்பு

### இருவர் கைது

■ எஸ்.தில்லைநாதன், வி.நிதர்ஷன்

அச்சுவேலியிலிருந்து கடத்திவரப்பட்ட 3 மாடுகள், யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவால் மீட்கப்பட்டுள்ளன. அத்துடன், சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் வாழ்வாதாரத்துக்காக வளர்க்கப்படும் மாடுகள் திருடப்படும் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில், பலாலியில் 3 மாடுகளை களவாடிச் சென்ற இருவர் கைது செய்யப்பட்டனர்.

**“ யாழ். மாவட்டத்தில் வாழ்வாதாரத்துக்காக வளர்க்கப்படும் மாடுகள் திருடப்படும் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையில், பலாலியில் 3 மாடுகளை களவாடிச் சென்ற இருவர் கைது செய்யப்பட்டனர்**

அச்சுவேலியிலிருந்து எந்த அனுமதியும் பெறாமல் கடத்திவரப்பட்ட குறித்த 3 மாடுகளையும் பொலிஸார் மீட்டுள்ளனர். அத்துடன், சம்பந்தப்பட்டவர்களையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள், அச்சுவேலி கிழக்கை சேர்ந்தவர்கள் என்றும் அவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகர மேயர் தெரிவு இழுபறிக்கு

## தமிழரசுக் கட்சியின் உட்பூசலே காரணம்

### ஈ.பி.டி.பி குற்றச்சாட்டு

■ எஸ்.தில்லைநாதன், வி.நிதர்ஷன்




யாழ். மாநகர சபையின் மேயர் தெரிவு இழுபறி நிலையில் சென்றுகொண்டிருப்பதற்கு தமிழரசுக் கட்சியின் அசமந்தப் போக்கு அல்லது அக்கறையின்மை போன்றவையே காரணம் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட உதவி அமைப்பாளரும் கட்சியின் யாழ். மாவட்ட ஊடகப் பேச்சாளருமான ஐயாத்துரை ஸ்ரீகேஸ்வரன் தெரிவித்தார்.

அது தொடர்பில், அவர்கள் எமது தலைமையுடன் உரிய பொறிமுறையுடன் கையாண்டிருந்தால் நிச்சயம் சாதகமான சூழ்நிலை உருவாக வாய்ப்பிருந்திருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் (13) நடைபெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

“யாழ். மாநகர சபையின் மேயர் தெரிவு இழுபறி நிலைக்கு பலரும் பலதரப்பட்ட கருத்துகள் கூறிவருகின்றனர். ஆனால், அதனை முன்னெடுக்கும் யாழ். மாநகர சபையில் அதிக ஆசனங்களை கொண்டுள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தான் மக்களின் மீது அக்கறை கொண்டு, முயற்சிகளை மேற்கொண்டிருக்க வேண்டும்.

“ஆனால், அவர்களுக்குள் இருந்த உட்பூசல்களால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு என்ற போர்வைக்குள் தமிழரசுக் கட்சியின் பிடிக்குள் இருந்த கட்சிகள் இன்று தனித்தனியாக சென்றுள்ள நிலையில், அவர்களுக்குள் ஒருமித்த தெரிவு இருந்திருக்கவில்லை.

“மாநகரின் மீது அவர்களுக்கு அக்கறை இருந்திருந்தால், எமது கட்சியுடன் அதிகார மட்டத்திலுள்ள பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனோ அல்லது அக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவோ அக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் சி.வி.கே சிவஞானமோ பேசியிருக்க வேண்டும்.

“ஆனால், எமது கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவின் பிரத்தியோக ஆலோசகருடன் தமது தெரிவான ஒருவரது பெயரைக் கூறி ஆதரிக்குமாறு, அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனே பேசியிருந்தார்.

“எமது கட்சி ஏற்கெனவே தொடர்ந்து கூறிவருது போல மக்களின் நலன்கருதியதாக உள்ளூராட்சி மன்றங்களை யார் ஆட்சி செய்ய முன்வருகின்றார்களோ அவர்களுக்கு ஆட்சி அதிகாரத்தை கொண்டுசெல்ல ஆதரவு கொடுத்துவந்திருந்தோம் என்றார்.

# கிலோ மீற்றரை தின்ற வீதி பெயர்ப் பலகை

■ மொஹொமட் ஆஸிக்

கண்டி, மடவளை, தெல்தெனிய வீதியில் அமைக்கப்பட்டுள்ள பெயர்ப்பலகையை கீழே காண்கிறீர்கள். இதில் காணப்படுகின்றன பாரிய தவறு காரணமாக, பயணிகள் திக்குமுக்காடுகின்றனர்.

மடவளையில் இருந்து மாத்தளைக்கான தூரம் 20 கிலோ மீற்றர் ஆகும். ஆனால், மேற்படி வீதி பெயர்ப் பலகையில் இரண்டு (2) கிலோ மீற்றர் என பொறிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குளறுபடி காரணமாக, வெளியிடங்களில் இருந்து வரும் சாரதிகள் மிகவும் குழப்பமான சூழ்நிலையை எதிர்கொள்கின்றனர்.

எனவே, இதனைத் திருத்த சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.




# பியர் குடித்துவிட்டு பிக்கு ரகளை

■ ரஞ்சித் ராஜபக்‌ஷ

போயா தினத்தன்று பியர் குடித்த பிக்கு ஒருவர், பெரும் ரகளையில் ஈடுபட்டிருந்த நிலையில், அந்தப் பௌத்த பிக்குக்கு பியர் விற்பனை செய்த சம்பவம் தொடர்பில் கலால் திணைக்கள அதிகாரிகளால் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

சிவனொளிபாத மலைக்குச் செல்லும் நல்லத்தண்ணி நகரிலுள்ள சுற்றுலா சபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட சுற்றுலா ஹோட்டலிலேயே இவ்வாறு பிக்கு ஒருவருக்கு பியர் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

சுற்றுலா ஹோட்டலுக்கு சுற்றுலா சபையின் ஊடாக வழங்கப்பட்ட மதுபான அனுமதிப்பத்திரத்துக்கு முரணாக, அந்தக் ஹோட்டலின் உரிமையாளரால் கடந்த 6ஆம் திகதி போயா தினத்தன்று பிக்கு ஒருவருக்கு, அந்தக் ஹோட்டலிலேயே அமர்ந்திருந்து பியர் அருந்துவதற்கு அனுமதியளித்தமை தொடர்பில், பிரதேசவாசிகளால் கடுமையான எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

பியரை குடித்துக்கொண்டிருந்த பிக்கு, போதை தலைக்கேறியதும் அங்கிருந்த நபர்களை கடுமையான தூசனவார்த்தைகளால் திட்டித்தீர்த்துள்ளார். அத்துடன் நகரில் அநாகரிகமான முறையில் நடந்துகொண்டுள்ளார். இதுதொடர்பில் நல்லத்தண்ணி பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இந்தச் சுற்றுலா ஹோட்டலில் போயா தினத்தில் களவாக பியர் விற்பனை செய்யப்படுவதாகவும் பியரை கொள்வனவு செய்யும் நபர்கள், அந்த பியர் போத்தல்களை உடைத்து, ஷொப்பிங் பேக்கில் ஊற்றி, சிவனொளிபாதமலைக்கு யாத்திரிகர்களாக வரும் இளைஞர்களுக்கு அதிக விலைக்கு விற்பனை செய்வதாகவும் விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.



இரண்டு நாற்றுக்களை பிடுங்கி

# துப்புக் கொடுத்த ‘ஏகல்’

திருமணமான 26 வயதான இளம் பெண்ணொருவர் படுகொலை செய்யப்பட்டு சேற்றுக்குள் புதைக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில், இராணுவ வீரர் ஒருவர் கைது செய்யப்பட்ட சம்பவம் கண்டி, அலவத்துகொடவில் அண்மையில் இடம்பெற்றிருந்தமையை யாவரும் அறிவீர்கள்.

அந்தக் கொலையாளியை கண்டுப்பிடிப்பதற்கு வயல்வெளியில் இரண்டு நாற்றுகளை கழற்றி ‘ஏகல்’ வழிகாட்டிகொடுத்தது என்று அஸ்கிரிய பொலிஸார் தெரிவித்தனர்.

கொலையாளியை கண்டுபிடிப்பதற்காக, களத்தில் இறக்கப்பட்ட பொலிஸ் மோப்ப நாயான ‘ஏகல்’ வயல்வெளியில் இரண்டு நாற்றுக்களை கழற்றியதன் பின்னர் வழங்கிய துப்பின் மூலமே, ஒருவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்ய முடிந்தது என பொலிஸார் தெரிவித்தனர்.

இரண்டு நாற்றுகளை கழற்றிய பொலிஸ் நாயான ‘ஏகல்’ மலைகளை கடந்து நான்கு கிலோ மீற்றர் மிகவும் கடுமையான பயணத்தை மேற்கொண்டு, சந்தேகநபரின் வீட்டுக்குள் நுழைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டி, அஸ்கிரிய பொலிஸ் மோப்பநாய் பிரிவின் பொலிஸ் கான்ஸ்டபிள் பீ.ஜி. ஜயரத்ன என்பவரால் பொலிஸ் மோப்பநாய் வழிநடத்தப்பட்டது. அந்தப் பிரிவின் உபபொலிஸ் பரிசோதகர் சந்திரவங்ச பெரேரா, அங்கு கண்காணிப்பு அதிகாரியாக பணியாற்றினர்.

இந்தத் தேடுதலின் போது தான் முகங்கொடுத்த விவரத்தை வெளியிட்ட ஜயரத்ன, “இந்த பெண்ணின் சடலம், வயலில் சேற்றுக்குள் அமிழ்த்தப்பட்டு, அதன்மேல் நாற்றுகள் நாட்டப்பட்டுள்ளமை முதலில் கண்டறியப்பட்டது. களத்தில் இறக்கப்பட்ட மோப்பநாய், இரண்டு நாற்றுகளை பிடுங்கி, துப்பு கொடுத்தது. அதன்பின்னர் என்னையும் இழுத்துக்கொண்டு வயலுக்குள் சென்று, வயலில் இருந்து மேலேறியது.

பின்னர் தேயிலைத்தோட்டத்துக்குள் புகுந்த ‘ஏகல்’ என்னையும் இழுத்துக்கொண்டே மேடுகளில் ஏறி, பள்ளங்களில் இறங்கி, சுமார் நான்கு கிலோ மீற்றருக்கு அப்பால் சென்று, வீடொன்றுக்கு முன்பாக நின்று கொண்டது.

அந்த வீட்டுக்கு முன்பாக நின்றிருந்த நபரொருவரை கடந்து சென்ற ‘ஏகல்’ அந்த வீட்டை ஒரேயொருமுறை சுற்றிவந்து வீட்டுக்குள் புகுந்துகொண்டது.

வீட்டுக்குள் புகுந்துகொண்ட ‘ஏகல்’, என்னையும் இழுத்துக்கொண்டு வீட்டுக்குள் ஓர் அறைக்குள் சென்று, அங்கிருந்த கட்டிலை முகர்ந்துகொண்டே அதன் கீழே அமர்ந்துகொண்டது.

அதன்பின்னரே, அவ்வீட்டில் இருந்த இராணுவ சிப்பாய், சந்தேகத்தின் பேரில் அலவத்துகொட பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இந்தப் பொலிஸ் மோப்ப நாயான ‘ஏகல்’ இதற்கு முன்னர் பல சந்தர்ப்பங்களில் பல குற்றச் சம்பவங்களுடன் தொடர்புடைய நபர்களை கைது செய்வதற்கான துப்பை துலங்கியுள்ளது என்றும் கண்டி அஸ்கிரிய பொலிஸ் மோப்பநாய் பிரிவு அறிவித்துள்ளது.

# 55 காதி நீதவான்கள் புதிதாக நியமனம்

■ உமாமகேஸ்வரி

55 காதி நீதிவான்களை இலங்கை நீதிச்சேவை ஆணைக்குழு புதிதாக நியமித்தாக காதி நீதிவான்கள் மன்றத்தின் உப தலைவரும் இரத்தினபுரி மாவட்ட காதி நீதவானுமாகிய எம்.ஐ.எம் யெஹியா கூறினார்.

இவ்வாறு புதிதாக நியமிக்கப்பட்ட காதி நீதவான்களுக்கும் முஸ்லிம் திருமண சட்டம் மற்றும் விவாகரத்து சட்டம் பற்றி முழுமையாக தெளிவுபடுத்தும் முகமாக ஒருநாள் கருத்தரங்கு இலங்கை காதி நீதவான்கள் மன்றத்தின் தலைவர் ஷேக் ஏ.எல்.ஏ.எம் பௌஸ் தலைமையில் கண்டியில் டொபாஸ் ஹோட்டலில் ஸம் ஸம் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் நடைபெற்றது.




# இடுப்பில் கைத்துப்பாக்கி நோர்வூட்டில் ஒருவர் கைது

■ ரஞ்சித் ராஜபக்‌ஷ

கைத்துப்பாக்கியை தன்னுடைய உடலில் மறைத்து வைத்திருந்த குற்றச்சாட்டின் கீழ், நோர்வூட், வெஞ்சர் தோட்டத்தில் வசிக்கும் ஒருவர் திங்கட்கிழமை (13) கைது செய்யப்பட்டுள்ளார்.

நோர்வூட் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட மேற்படி நபர், காலி, பூஸா இராணுவ முகாமில் பயிற்சியில் ஈடுபட்ட இராணுவ வீரர் என்றும் தெரியவருகின்றது.

அந்த இராணுவ முகாமில் இருந்து தப்பிய இராணுவ வீரர், வெஞ்சர் தோட்டத்தில் வீடொன்றில் தங்கியிருந்து சாரதியாக கடமையாற்றியிருந்தார் என்பது விசாரணைகளின் ஊடாகக் கண்டறியப்பட்டது.

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட இந்தக் கைத்துப்பாக்கிக்கு பொருத்தவேண்டிய சன்னங்கள் இல்லை என்றும், இதை அவர் தன்னுடைய இடுப்பில் மறைத்து வைத்திருந்த நிலையிலேயே கைது செய்யப்பட்டிருந்தார்.



கைத்துப்பாக்கி கிடைத்த விவகாரம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் இராணுவத்தினர், இதுதொடர்பில் லக்‌ஷ்பான இராணுவ முகாமின் அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளனர். அத்துடன், சந்தேகநபரை ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றனர்.

# கம்பளை சாட்சியாளர் மயங்கிவிழுந்து மரணம்

■ ராமு தனராஜா

சாட்சியமளிப்பதற்காக நீதிமன்றத்துக்கு வந்திருந்த கம்பளையைச் சேர்ந்த சாட்சியாளர் (வயது 62) நீதிமன்ற அறைக்குள் நுழைந்த வேளையில் திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்த சம்பவம் வெலிமடையில் நேற்று (14) இடம்பெற்றுள்ளது.

அங்கிருந்தவர்கள் அவரை மீட்டு, வெலிமடை வைத்தியசாலையில் அனுமதித்த போது அவர் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

அந்த முதியவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக வெலிமடை வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக வெலிமடை பொலிஸ் நிலைய உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# மாணவனை காணவில்லை

பதுளை, ஸ்பிரிங்வெளி தோட்ட, நாவலவத்தையில் (4ஆம் பிரிவு) வசித்து வந்த 16 வயதான விவேகானந்தன் ரகுமான் என்ற மாணவன் காணாமல் போயுள்ளார்.

பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதியிலிருந்து இவரைக் காணவில்லை என பதுளை பொலிஸ் நிலையத்தில் பெற்றோர் முறைப்பாடு செய்துள்ளனர்.

பெத்தேகம பகுதியில் உள்ள சகோதர மொழிப் பாடசாலையில் தரம் 11இல் கல்வி கற்று வந்த குறித்த மாணவன், சம்பவ தினமன்று பெத்தேகம புராதன மகா விகாரையில் நடைபெற்ற மேலதிக வகுப்பிற்கு செல்வதாக கூறிச் சென்றுள்ளார்.

அவர் இறுதியாக சிவப்பு நிற டீ- சேர்ட்டும், நீல நிற நீள காற்சட்டையும் அணிந்திருந்ததுடன், ஊதா நிறப் புத்தகப் பையை கொண்டு சென்றுள்ளார்.

இவர் குறித்த தகவல் அறிந்தோர் 076 0178821, 077 2405245 என்ற அலைபேசி இலக்கங்களுக்கு அல்லது அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்குமாறு தந்தை விவேகானந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



# மாத்தளையில் கவி அரங்கு

■ ஏ.எம்.ஜலீல்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்டையில் கூடிய புள்ளிகளைப்பெற்று சித்திபெற்ற மாணவி, மாணவர்களைப் பாராட்டி பரிசில்கள் வழங்கும் நிகழ்வு கலேவெல தேவஹுவ முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் அந்த பாடசாலையின் அதிபர் எம். இம்தியாஸ் தலைமையில் நடைபெற்றது

அத்துடன், வாசிப்புத்திறனை விருத்திசெய்யும் நோக்கில் கட்டுரை, கவிதை, பேச்சு, சொற்பொழிவு ஆகியனவற்றில் திறமைகாட்டிய மாணவி, மாணவர்களைப் பாராட்டி அவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

அதுமட்டுமன்றி, ஊடக மற்றும் சமூகத்துறைகளில் ஈடுபாடு காட்டுபவர்களுக்கும் பொன்னாடைகள் போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வை, முஸ்லிம் மீடியா போரம், இளம் எழுத்தாளர்கள் சம்மேளனம் ஆகியன இணைந்து நடத்தியது. முஸ்லிம் மீடியா போரம் மாத்தளை மாவட்ட இணைப்பாளரும் இளம் எழுத்தாளர் சம்மேளனத் தலைவருமான எம். நிஜாமுதீன் ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வுக்கு தேசிய அமைப்பாளர் ரசீத் எம் ரியாழ், செயலாளர் மௌலவி ஏ.காதிர்காண் ஆகியோர் ஒத்துழைப்புகளை வழங்கியிருந்தனர்.



இதன் அடுத்த நிகழ்வாக மாத்தளையில் கவிதை அரங்கொன்றையும் இளம் கலைஞர்களின் ஒன்றுகூடல் ஒன்றையும் நடத்துவதற்கான ஏற்பாட்டை மேற்கொள்ள இருப்பதாக எம்.நிஜாமுதீன் தெரிவித்தார்

# ஆசிரியர் விடுதலை முன்னணி ஆதரவு

■ பி.கேதீஸ்

நாடளாவிய ரீதியாக இன்று (15) இடம்பெறுகின்ற தொழிற்சங்க போராட்டத்துக்கு ஆசிரியர் விடுதலை முன்னணி பூரண ஆதரவை வழங்குவதாக ஆசிரியர் விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் என்.டி.எஸ்.நாதன் தெரிவித்துள்ளார்.



அடக்கு முறைகளையும் வரிச் சுமைகளையும், விலைவாசி உயர்வையும், கட்டணங்களின் அதிகரிப்புகளையும் எதிர்த்து நாடளாவிய ரீதியில் அனைத்து தொழிற்சங்கங்களும் இணைந்து நடத்துகின்ற ஜனநாயக போராட்டத்தில், ஆசிரியர் விடுதலை முன்னணியும் இணைந்து கொள்கின்றது என்றார்.

# நாளைய தலைவர்களின் நேரத்தில் விளையாடாதீர்கள்

தங்களுடைய உரிமைகளை பெற்றுக்கொள்வதற்காக ஜனநாய ரீதியில் போராட்டங்கள், எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், பேரணிகளை நடத்துவதில் எவ்விதமான பிரச்சினைகளும் இல்லை. எனினும், பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்காத வகையில் அவையாவும் முன்னெடுக்கப்படவேண்டும்.

புதிய வரிக்கொள்கை, பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குதல், விலையேற்றம், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை வலியுறுத்தி, இன்று (15) நாடளாவிய ரீதியில் பாரிய போராட்டங்களை ஒன்றிணைந்த தொழிற்சங்கள் முன்னெடுக்கவுள்ளன. இதனால், பல துறைகள் ஸ்தம்பிக்கும் சாத்தியம் இருக்கிறது.

போராட்டங்களை இரும்புக் கால்களைக் கொண்டு அடக்கும் வகையில், அந்தந்தத் துறைகளை அத்தியாவசிய சேவைகளாக அரசாங்கம் பிரகடனப்படுத்தியுள்ளது. திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், நிறுவனங்கள் போன்றவற்றின் ஊழியர்களின் விடுமுறைகள் அரசாங்கத்தால் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இதற்கிடையே, அரசாங்கத்துக்கு எதிரான செயற்பாடுகளில் குதிக்கும் அரச ஊழியர்கள் தொடர்பிலான தகவல்கள் திரட்டப்படுவதாகவும் அவ்வாறானவர்களுக்கு சம்பள உயர்வு, பதவியுயர்வு வழங்கப்படமாட்டாது என்றும், எதிர்காலங்களில் அரச தொழில்களுக்கு விண்ணப்பிப்பவர்கள் தொடர்பில் பொலிஸ் நற்சான்று பத்திரம் பெற்றுக்கொள்ளப்படும் என்றும் அரசாங்கத் தகவல்கள் கசிந்திருந்தன.

இந்நிலையில்தான், கல்வி பொதுத் தராதர பரீட்சை காலதாமதமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. கொரோனாவால் பல பரீட்சைகள் தாமதமாகிவிட்டன. பாடசாலை மாணவர்களைப் பொறுத்தவரையில், கல்வியின் மீதான நாட்டம் குறைந்துவருகின்றது. அதற்கு, உரிய நேரத்தில் பரீட்சைகள் நடத்தப்படாமை மிகமுக்கிய காரணங்களில் ஒன்றாகும்.

போராட்டம் நடத்தப்படவேண்டும்; அதில் பங்கேற்பதும், பங்கேற்காமல் இருப்பதும் அவரவர் தனிப்பட்ட விரும்பமாகும். எனினும், பரீட்சைக்காலத்தில் இவ்வாறான போராட்டம் நடத்தப்படுவது நாளைய தலைவர்களின் வாழ்க்கையை சிதைத்துவிடும் என்பதே எமது அவதானிப்பாகும்.

விடைத்தாள்களை மதிப்பிடுவதற்கான கட்டணங்களை அதிகரிக்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது. வாழ்க்கைச் செலவுகளை பார்க்குமிடத்து, வரவில் பலமடங்கை செலவுகள் விஞ்சி நிற்கின்றன. இது ஒவ்வோர் துறையைச் சேர்ந்தவர்களையும் வாட்டி வதைத்து கொண்டிருக்கின்றது. இந்நிலையில்தான், விடைத்தாள்களை மதிப்பிடச் சென்று, செலவுகளை இழுத்துக்கொள்வதை விடவும், போகாமல் இருப்பதே மேலென்று பலரும் விண்ணப்பிக்காது விட்டுவிட்டனர்.

மதிப்பீட்டாளர்களின் கோரிக்கை நியாயமானதாக இருக்கிறது. எனினும், பரீட்சைக்கு முன்னரே இவ்வாறான கோரிக்கையை முன்வைத்து, அரசாங்கத்துக்கும் கல்வியமைச்சுக்கும் அழுத்தம் கொடுத்திருக்கலாம். அதனூடாக ஏதாவது சாதகமான பதில் கிடைத்திருக்கும். எனினும், இறுதிநேரத்தில் மறுதலிப்பது மாணவர்களின் காலத்தையே நாசமாகும்.

கொரோனாவுக்குப் பின்னரான காலத்தில், கல்வி நடவடிக்கையை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவாகும். அதற்குப் பிரதான காரணம் ஒத்திவைக்கும் முடிவாகும். எனினும், ஒருசிலர் மட்டுமே விரும்பி கற்கின்றனர். அவர்களின் வாழ்க்கையிலும் இந்தப் போராட்டங்கள் விளையாடிவிடக்கூடாது என்பதே எமது வலியுறுத்தலாகும்.

உரிமைக்காக போராடவேண்டும்; போராட்டங்கள் வெற்றி பெற வேண்டுமாயின் மக்கள் பங்குப்பற்றல் அவசியம் என்பதை நினைவில் கொள்க!




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# ரூபாய் ஏன் திடீரென மேலே பாய்ந்தது?



எம்.எஸ்.எம். ஐயூப்

இது ஆச்சரியம் தான்! ஆனால் உண்மை. நாடு சாதாரண நிலையில் இருந்த கடந்த பல தசாப்தங்களாக, ஐக்கிய அமெரிக்க டொலரோடு ஒப்பீட்டளவில் இலங்கையின் ரூபாயின் பெறுமதி குறைந்த வண்ணமே இருந்தது. ஆனால், இலங்கை வங்குரோத்து அடைந்ததாக நாட்டின் தலைவர்களே அறிவித்ததன் பின்னர், ரூபாயின் பெறுமதி கடந்த சில நாள்களாக தொடர்ச்சியாக அதிகரித்தது.

இப்போது ஆளும் கட்சிகளான ஐக்கிய தேசிய கட்சியினதும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர்கள், நாடு முன்னேறி வருவதாக மார்தட்டிக் கொள்கிறார்கள். இதைப் பார்த்து, உலகில் ஏனைய நாடுகளும் தாம் வங்குரோத்து அடைந்ததாக அறிவிக்க வேண்டும் என்று அவர்கள் கருதுகிறார்களோ தெரியாது.

ரூபாயின் பெறுமதி அதிகரித்ததோடு, ஆளும் கட்சிகளின் அரசியல் தலைவிதியும் மாறுமா என்ற கேள்வி எழுப்பப்படுகிறது. அண்மைக்கால கருத்து கணிப்புகளின்படி, அவற்றின் நிலை எவருமே எதிர்ப்பார்க்காத அளவில் படு மோசமாகவே இருந்தது.

சில கருத்துக் கணிப்புகளின்படி, ஜே.வி.பியின் தலைமையிலான தேசிய மக்கள் சக்தியும் பிரதான எதிர்க்கட்சியாகக் கருதப்படும் ஐக்கிய மக்கள் சக்தியும் கூட்டாக 60 சதவீதத்துக்கும் மேல் வாக்குகளை பெற்றிருந்தன. அவற்றிலும் தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் சக்தியைப் பார்க்கிலும் அதிக வாக்குகளை பெற்றிருந்தது.

அந்தக் கருத்துக் கணிப்புகளின் பிரகாரம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி ஒன்பது சதவீத வாக்குகளையும் மஹிந்த ராஜபக்ஷவை தலைவராகக் கொண்ட ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன எட்டு சதவீத வாக்குகளை மட்டுமே பெற்றிருந்தன. இரண்டு ஆளும் கட்சிகளும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திப் போட, இதுவே உண்மையான காரணமாகும். விந்தை என்னவென்றால், நாடே இதை அறிந்திருக்கிறது என்பது அவர்களுக்கும் தெரியும்.

ரூபாயின் பெறுமதி சற்று உயர்ந்து, சில உணவுப் பொருட்களின் விலையும் குறையவே, இரண்டு ஆளும் கட்சிகளினது ஆதரவாளர்களும் தாம் இதுவரை பதுங்கி இருந்த குகைகளில் இருந்து தலையை சற்று வெளியே காட்டி, வீராப்புப் பேசவும் முன்வந்துள்ளனர். 'முகநூல்' போன்ற சமூக வலைத்தளங்களில் அவர்களது குறிப்புகளைப் பார்த்தால், அது தெளிவாக விளங்குகிறது.

நாடு பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு, அபிவிருத்திப் பாதையில் நடைபோடுவதைப் போல்தான், அவர்கள் கருத்துத் தெரிவித்து வருகிறார்கள்.

உண்மையிலேயே அது தான் நிலைமை என்றால், அரசியலை மறந்து மக்கள் அதனை வரவேற்க வேண்டும். அந்த நிலைக்கு நாட்டை உயர்த்தியதற்காக ஆளும் கட்சிகளின் தலைவர்களைப் பாராட்ட வேண்டும். ஆயினும் உண்மை அதுவல்ல!

அவர்களது மகிழ்ச்சி, சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து வரும் செய்திகளால் மேலும் இரட்டிப்பாகி இருக்கலாம். இலங்கையின் கடன் மறுசீரமைப்புப் பணிக்காக உதவவும் இலங்கைக்கு நாலாண்டுகளுக்கு 2.9 பில்லியன் டொலர் கடன் வழங்கவும் சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் கடந்த செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி இணக்கம் தெரிவித்தனர்.

கடன் மறுசீரமைப்பு என்றால், வழங்கிய கடனில் ஒரு பகுதியை அல்லது அதன் வட்டியிலிருந்து ஒரு பகுதியை அல்லது அவ்விரண்டையும் கழித்துவிடுவதாகவும் இருக்கலாம்; கடனை திருப்பிச் செலுத்தும் காலத்தை ஒத்திப் போடுவதாகவும் இருக்கலாம்.

ஆயினும், இலங்கை பெற்ற கடன்களை மறுசீரமைக்க, கடன் வழங்கிய நாடுகள் இணக்கம் தெரிவித்தால் மட்டுமே, நாணய நிதியத்தின் பணிப்பாளர் சபை இந்த இணக்கத்தை உறுதி செய்யும் என்றும் நிதியத்தின் அதிகாரிகள் தெரிவித்து இருந்தனர். அதன்படி, கடந்த பெப்ரவரி இறுதியில், சீனாவைத் தவிர இலங்கைக்கு கடன் வழங்கிய சகல நாடுகளும், அக் கடன்களை மறுசீரமைக்க இணக்கம் தெரிவித்தன. சீனாவும் இறுதியில் வளைந்து கொடுக்கும் போல் தான் இருந்தது.

கடந்த ஆறாம் திகதி, சீனாவும் திருப்திகரமான செய்தியொன்றை அனுப்பியது. அதன் படி, இலங்கைக்கு வழங்கும் உதவியை உறுதிப்படுத்துவதை, நாணய நிதியத்தின் பணிப்பாளர் சபை எதிர்வரும் 20ஆம் திகதி ஆராயும் என அந்நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா கடந்த ஏழாம் திகதி தெரிவித்தார். அதன்படி, இம்மாதம் அல்லது அடுத்த மாதம் நிதியத்தின் முதல் கட்ட உதவித் தொகை வந்தடையும் என அரச தலைவர்கள் கருதுகின்றனர். எனவே, 'எல்லாம் சரியாகிவிட்டது' என்ற மனப்பான்மையில் ஆளும் கட்சியினர் இருக்கின்றனர்.

இலங்கை அரசாங்கத்தின் செலவுகளையும் கடன் பொறுப்புகளையும் கருத்தில் கொள்ளும் போது, சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கிடைக்கவிருக்கும் 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் தொகை, நாட்டை தற்போதைய நெருக்கடியிலிருந்து மீட்டெடுக்க போதிய தொகையல்ல. அத்தொகை நான்கு வருடங்களுக்குள் படிப்படியாகவே கிடைக்கும். அதன் இவ்வருட தவணைத் தொகை, சுமார் 360 மில்லியன் டொலர் எனக் கூறப்படுகிறது.

கடந்த வருடம் இந்தியா வழங்கிய கடன் தொகை மட்டும் மூன்று பில்லியன் டொலருக்கும் மேலாகும். இலங்கை இது வரை பெற்ற கடனுக்காக, வருடமொன்றுக்கு 6-7 பில்லியன் டொலரை திருப்பிச் செலுத்த வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த ஏழாம் திகதி பாராளுமன்றத்தில் கூறினார். வருடமொன்றுக்கு இலங்கை, சுமார் ஆறு பில்லியன் டொலர் பெறுமதியான எண்ணெயை இறக்குமதி செய்கிறது. நான்கு பில்லியன் டொலர் பெறுமதியான உரத்தை இறக்குமதி செய்கிறது. நாணய நிதியத்தின் உதவித் தொகை எவ்வளவு சிறியது என்பது, அதன் மூலம் தெரிகிறது.

நாணய நிதியத்தின் உண்மையான உதவி, இந்நிதித் தொகை அல்ல. பெற்ற கடனை திருப்பிச் செலுத்த முடியாத அளவுக்கு, வங்குரோத்து நிலையை அடைந்த இலங்கைக்கு, அதன் உத்தரவாதத்தில் மேலும் கடன் வழங்கவும் வழங்கிய கடன்களை மறுசீரமைக்கவும் வெளிநாடுகள் முன்வருவதே உண்மையான உதவியாகும்.

அரசாங்கத்தின் தலைவர்களிடம் சரியான திட்டம் இருந்தால், அதன் மூலம் நாட்டை பொருளாதார ரீதியில் வளம்பெறச் செய்ய முடியும். ரூபாயின் பெறுமதி அதிகரிப்பானது, ஆளும் கட்சியினர் கூறுவதைப் போல் நாடு, பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான அறிகுறியோ அல்லது எதிர்க்கட்சியினர் கூறுவதைப் போல், அரசாங்கத்தின் கண்கட்டு வித்தையோ அல்ல. அது, பொருளாதார நெருக்கடியின் காரணமாக, மத்திய வங்கி எடுத்த சில தற்காலிக நடவடிக்கைகளின் பெறுபேறாகும்.

உண்மையிலேயே என்ன நடந்தது என்பதை, ரூபாயின் பெறுமதி முதன் முதலாக எப்போது உயர ஆரம்பித்து என்பதைக் கவனித்தால் விளங்கும். அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்யும் நிறுவனங்களுக்கு உதவுவதற்காக, உலக வங்கியின் முதலீட்டுப் பிரிவான சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம், இலங்கையில் மூன்று வர்த்தக வங்கிகளுக்கு 400 மில்லியன் டொலர் வழங்குவதாக, கடந்த பெப்ரவரி 28 ஆம் திகதி அறிவித்தது. அதற்கு மறுநாளே ரூபாயின் பெறுமதி உயர ஆரம்பித்தது.

இலங்கையின் நிதிச் சந்தையில் புழக்கத்தில் உள்ள டொலர் தொகை அதிகரிப்பதற்கு, அண்மையில் வேறு சில காரணிகளும் ஏதுவாயின. தொடர்ச்சியாக பின்பற்றப்பட்ட இறக்குமதி கட்டுப்பாட்டால், டொலர் வெளியேற்றம் வெகுவாகக் குறைந்தது. அத்தோடு அண்மைக்காலமாக உல்லாச பிரயாணத்துறை மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு மூலம் கூடுதலான வெளிநாட்டு செலாவணி இலங்கைக்கு கிடைத்தது.

ஏற்றுமதியாளர்கள் வர்த்தக வங்கிகளுக்கு விற்கும் வெளிநாட்டு பணத்தில், 25 சதவீதத்தை அவ்வங்கிகள் மத்திய வங்கிக்கு விற்க வேண்டும் என்று விதிக்கப்பட்டு இருந்தது. அதனை கடந்த மாதம் மத்திய வங்கி 15 சதவீதமாக குறைத்தது. அதன் மூலம் சந்தையில் புழங்கும் டொலர் தொகை மேலும் அதிகரித்தது. விரைவில் சர்வதேச நாணய நிதியத்திடம் 2.9 பில்லியன் டொலர், நாட்டுக்குள் வந்து சேர்ந்து, அதன் மூலம் டொலரின் பெறுமதி குறையும் என்ற அச்சத்தால், பல வர்த்தகர்கள் கையிருப்பில் இருந்த வெளிநாட்டுப் பணத்தை விற்க ஆரம்பித்திருந்தனர் என வங்கித்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் தான், சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்திடம் இருந்தும் 400 மில்லியன் டொலர் சந்தைக்கு வரப்போகிறது என்ற செய்தி கடந்த 28ஆம் திகதி வந்தது. உடனே, மறுநாள் டொலருக்கான கிராக்கி குறைந்து, ரூபாயின் பெறுமதி உயர்ந்தது. ஆனால், இது இறக்குமதிகள் கட்டுப்படுத்தப்பட்டு, பல கைத்தொழில்கள் செயலிழந்து, பொருளாதாரம் முடக்கப்பட்ட நிலையில், ஏற்பட்ட ஒரு நிலைமையேயன்றி சாதாரண நிலைமையின் கீழ் இடம்பெற்ற ஒரு மாற்றம் அல்ல.

இலங்கைக்கான தமது உதவித் திட்டத்தை சர்வதேச நாணய நிதியம் அங்கிகரித்தவுடன், இலங்கை உலக வங்கியிடமும் ஆசிய அபிவிருத்திய வங்கியிடமும் ஜப்பானிடமும் மேலும் 3 பில்லியன் டொலரும் இந்தியாவிடம் 1 பில்லியன் டொலரும் கடனாக பெறுவதற்கு திட்டமிட்டு இருக்கிறது. அதனால் ரூபாயின் பெறுமதி மேலும் குறையலாம்.

எனினும், இவை அனைத்தும் எதிர்காலத்தில் திருப்பிச் செலுத்த வேண்டிய கடன்களாகும். எனவே, இக்கடன்களை பாவித்து, பொருளாதார அபிவிருத்தித் திட்டமொன்றை அமலாக்காவிட்டால் எதிர்காலத்தில் தற்போதைய பொருளாதார நெருக்கடியைப் பார்க்கிலும் மோசமான நெருக்கடிகளை சந்திக்க நேரும். அவ்வாறான திட்டம் எதுவும் இருப்பதாக தெரியவில்லை.



## வாழ்வியல் தரிசனம்

காரணத்தின் நிமித்தம் ஒருவரிடம் பழகுதல் இழிவானது. பெர்மை அதற்குள் இணைந்தது போலாகிவிடுகிறது. உண்மையற்ற உறவு நிரந்தரமானது அல்ல! அது இல்லாமல், தூர்ந்து போய்விடும்.

சுயநலத்துடன் எவருடனும் பழகினால், காலப்போகில் பகைதான் மிஞ்சும். சுயநல எணணமே, நம்பிக்கை மோசடியின் ஒருரகம். இதையே தாராளமாக அநேகர் செய்கின்றனர்.

இந்தக் கெட்ட நடத்தை, உறவினர்களுக்கு உள்ளும் நடைபெறுகின்றது. காரியங்கள் நடக்கும்வரை, உறவு எனச் சொல்பவர்கள், காரியங்கள் வெற்றிபெற்றதுடன், கழற்றிவிட்டுப் போய்விடுகின்றனர்.

எனினும் சுயநலம் உண்மைக் கருத்து வேறானது. ஒருவர் நியாயமான வழியில், தன்னை வளர்ப்பதில் என்ன தப்பு? ஒருவரிடம் காரணத்துடன் இணைந்து, காரியம் முடிப்பதும் விலகுபவர்களே, சுயநலம் மிக்க மனிதர்களாகின்றார்கள்.

உழைத்தவர்கள் கஷ்டப்பட்டே பயனடைகின்றார்கள். அவர்களில் அநேகர், பரோபகாரியர்களாக மிளிர்கின்றார்கள். எவரையும் சுரண்டாமல், தங்கள் நலனை உயர்துவது நல்லதேயாகும். தசார்ந்தவர்கள் ம்டுமல்ல, யாவரைய் வாழவைப்பதுதான் தர்ம்.னானும்

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### தடுக்க நடவடிக்கை எடுக்கவும்


### நெல் வயலில் மண் அகழ்வு

கிளிநொச்சி புளியம்பொக்கனை கமநல சேவை பிரிவுக்கு உட்பட்ட புளியம்பொக்கனை பகுதியில் நெற்செய்கை அறுவடை முடிந்து, ஒரு வாரம்க கூட ஆகாத நிலையில், வயல் நிலங்களில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறுவதாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

மேற்படி பகுதியில் உள்ள வயல் நிலங்களில், பல அடி ஆழத்துக்கு குழிகள் தோண்டப்பட்டு, இரவு வேளைகளில் டிப்பர், டிரக்டர் என்பவற்றின் மூலம் அனுமதின்றி மணல் ஏற்றிச் செல்லப்படுவதாகவும் தற்பொழுது ஏ35 வீதியில் புளியம்பொக்கனை, கண்டாவளை, கல்லாறு, கல்மடு ஆகிய பகுதிகளில் மணல் அகல்வு, முற்றாகத் தடைசெய்யப்பட்டு இருந்தபோதிலும், எந்த அதிகாரியின் துணையுடன் எந்தக் காணி உரிமையாளரின் அனுமதியும் இன்றி, எப்படி மணல் அகழ்வு நடைபெறுகின்றது என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இப்பகுதியில் தொடர்ச்சியாக மணல் அகழ்வு இடம்பெற்றுவருவதாகவும், இது தொடர்பாக சம்பந்தப்பட்ட உரிய அதிகாரிகள் கருத்தில் கொண்டு, விவசாய நிலங்கள் அழிவடைவதைத் தடுக்குமாறும் ஒவ்வொரு வருடமும் நெற்செய்கை மேற்கொள்ளப்படும் போது, பல லட்சம் ரூபாய் செலவு செய்து வயல் நிலங்களை நிரப்பவேண்டி உள்ளதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

யது பாஸ்கரன்



# நெய்தல் கடற்கரை



பாலசிங்கம் நிர்மலா
(ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம் )

நாவற்குழிப் பிரதேசமானது நெல் விளையும் பூமியையும், அதனிடையே பொங்கி வழியும் குளங்களையும், தென்னை, பனை போன்ற வானுயர்ந்த மரங்களையும், அதிகளவிலான வயல்வெளிகளையும் கொண்ட இவ் அழகிய கிராமத்தில் உள்ள நெய்தல் கடற்கரை நகர் நோக்கி எனது பயணம் இருந்தது.

கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் என்பதற்கு ஏற்ப கடலை அடிப்படையாகக் கொண்டு வியக்க வைக்கும் அழகுடன் இயற்கையாகக் காட்சியளித்த இந் நெய்தல் கடற்கரை நகரைப் பார்த்து வியந்து நின்றேன்.

20 ஏக்கர் நிலப்பரப்பில் இயற்கையான அலங்காரங்களுடனும், பனை மரங்கள், கடற்கரை என்பவற்றைப் பயன்படுத்தி வருமானத்தைப் பெற்றுக் கொள்வதுடன் சுற்றுலாத் தளமாகவும் அமைந்திருந்தது. மாலை நேரக் காட்சிகள் என் கண்களைப் பறித்து முன்னேறிச் சென்று அந் நெய்தல் கடற்கரை நகரைச் சுற்றிப் பார்க்கச் செய்தது.

உள்ளே சென்றவுடன் மண்குடிசை ஒன்று வரவேற்றது. அதன் வெளிப்பகுதியில் மாட்டுவண்டில் ஒன்று நிறுத்தப்பட்டிருந்தது. முற்றத்தில் ஒடியல் காயவைக்கப்பட்டிருந்தது. அவற்றைப் பார்த்து இரசித்தபடி மண்குடிசையின் உள்ளே சென்றேன். அங்கே பார்த்த காட்சிகள் என்னைக் கவர்ந்து இழுத்தன. பனையோலைகளில் செய்யப்பட்ட அலங்காரப் பொருட்களும், களிமண்ணில் செய்யப்பட்ட மண்பாத்திரங்களும் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தன. உண்மையிலேயே அங்குள்ள பனை மரங்களை வைத்து பனைசார் உற்பத்திப் பொருட்களைத் தயாரித்து விற்பனை செய்வது பாராட்டத்தக்க விடயமாக இருந்தது.

தொடக்கமே அழகாக இருந்தமை மேலும் என்னை முன்னேறிச் செல்லத் தூண்டியது. அங்கே குளத்தின் நடுவே காவோலைகளால் வேயப்பட்ட படகு என்னை இளைப்பாறிச் செல்லுமாறு அழைத்தது. அதில் சென்று அமர்ந்தேன். சில்லென்ற காற்று வந்து என்னை வருடிச் சென்றது. ஆஹா... என்ன! ஓர் அழகிய நகர்.

கொஞ்ச நேரம் இளைப்பாறி விட்டு முன்னேறிச் சென்றேன். வெள்ளைத் தாஜ்மஹால் ஒன்று வந்து தன் அழகை இரசித்துச் செல் என்றது. அது பிரமிக்க வைக்கும் அழகுடன் நுட்பமாகச் செதுக்கப்பட்டிருந்தது.

அதனைத் தாண்டிச் செல்லும் போது மாலை நேரம் சிறுவர்கள், இளைஞர்கள் எனப் பலரும் விளையாட்டு மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். நானும் சிறுவயது நினைவுகள் வரவே ஓடிச்சென்று ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருந்தேன். சூரியன் மெல்ல மெல்ல மறையத் தொடங்கியது. இன்னும் பார்ப்பதற்கு நிறைய விடயங்கள் இருக்கிறது. ஊஞ்சலில் இருந்து எழும்பி வேக வேகமாக முன்னேறினேன்.

கடற்கரை குளிர்காற்றுடன் என்னை வரவேற்றது. கடற்கரை மண்ணில் ஐந்தாறு நடை போட்டுவிட்டு வந்த பாதையில் திரும்பி நடந்தேன். இரு கரைகளிலும் தோட்ட நிலங்களையும், பயிர் விளைக்கப்பட்ட நிலங்களையும் பார்க்க முடிந்தது. அப்படியே அழகிய இயற்கை வளங்கள் நிறைந்திருந்த நெய்தல் கடற்கரை நகரை இரசித்துக் களைப்படைந்தேன்.

களைப்படைந்த என்னை நெய்தல் கடற்கரை நகரின் உள்ளே இருந்த உணவகம் வரவேற்றது.அங்கே இயற்கை

**இயற்கை உணவுகளான காளான் சூப், ஒடியல் கூழ் போன்றன விற்பனைக்குத் தயார் நிலையில் இருந்தன.**

**அங்கே பார்த்த காட்சிகள் என்னைக் கவர்ந்து இழுத்தன. அலங்காரப் பொருட்களும், களிமண்ணில் செய்யப்பட்ட மண்பாத்திரங்களும் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தன**

உணவுகளான காளான் சூப், ஒடியல் கூழ் போன்றன விற்பனைக்குத் தயார் நிலையில் இருந்தன. ஒடியல் கூழ் ஒரு கப் வாங்கிக் குடித்தேன். சில்லென்ற காற்று வீச சூடான ஒடியல் கூழ் யாழ்ப்பாணப் பாரம்பரியத்தை வெளிப்படுத்தியது.

சூரியன் மறையும் நிலையில் வீடு வந்து சேர்ந்தேன். அன்றைய மாலைப் பொழுது இயற்கை வளம் நிறைந்த அழகிய நெய்தல் கடற்கரை நகருடன் கழிந்தது.






# அமைச்சரவை முடிவுகள்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில், 13.03.2023 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்

### 01. மத்திய அரசின் கீழ் கொண்டுவரல்

1975 ஆம் ஆண்டில் சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட அம்பலாந்தோட்டை பிரதேசத்தில் அமைந்துள்ள ரிதியகம புனர்வாழ்வு நிலையம் 1990 ஆம் ஆண்டு தென்மாகாண சபை சமூக அலுவல்கள் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையத்தில் கிட்டத்தட்ட 450 பேருக்கு மாத்திரமே தங்கியிருந்து புனர்வாழ்வளிக்கக்கூடிய வசதிகள் இருப்பினும், தற்போது 576 பேர் தங்கியிருந்து புனர்வாழ்வு பெறுவதால் புனர்வாழ்வு பெறுபவர்கள் மிகவும் அழுத்தங்கள் மற்றும் சிரமங்கள் பலவற்றுக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளது.

இந்நிலைமையாலும், நாடளாவிய ரீதியில் நீதிமன்றக் கட்டளைகளுக்கமைய ஒப்படைக்கப்படுபவர்களும் இந்நிலையத்தில் தங்கியிருந்து புனர்வாழ்வு பெறுவதையும் கருத்தில் கொண்டு, குறித்த இப்புனர்வாழ்வு நிலையத்தை தென்மாகாண சபையின் நிர்வாகத்திற்குப் பதிலாக தேசிய மட்டத்திலான நிலையமாக மத்திய அரசின் கீழ் நிர்வகிப்பது மிகவும் பொருத்தமெனக் கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, ரிதியகம புனர்வாழ்வு நிலையத்தை சமூக சேவைகள் திணைக்களத்திற்கு ஒப்படைப்பதற்காக மகளிர், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சராக ஜனாதிபதியும், நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரும் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 02. மிதக்கும் சூரிய மின்கல மின்னுற்பத்தி

இரத்தினபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள சந்திரிக்கா குளம் மற்றும் மொனராகலை மாவட்டத்தில் அமைந்துள்ள கிரிஇப்பன் குளம் போன்ற நீர்த்தேக்கங்களின் மேற்பரப்பில் மிதக்கும் சூரிய மின்கல மின்னுற்பத்தித் தொகுதியை அமைக்கும் முன்னோடிக் கருத்திட்டம் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

கொரிய குடியரசுக்கும், இலங்கைக்கும் இடையில் 2009 ஆம் ஆண்டில் கையொப்பமிடப்பட்ட உதவி வழங்கும் வேலைச் சட்டகத்தின் கீழ் கொரிய குடியரசின் வர்த்தக, கைத்தொழில் மற்றும் வலுசக்தி அமைச்சரால் இரத்தினபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள சந்திரிக்கா குளம் மற்றும் மொனராகலை மாவட்டத்தில் அமைந்துள்ள கிரிஇப்பன் குளம் போன்ற நீர்த்தேக்கங்களின் மேற்பரப்பில் மிதக்கும் 01 மெகாவோற் இயலளவு கொண்ட சூரிய மின்கல மின்னுற்பத்தித் தொகுதி நிறுவுவதற்கான முன்னோடிக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 6.83 பில்லியன் கொரியா வொன்களை வழங்குவதற்கு விருப்பம் தெரிவிக்கப்பட்டது.

கொரிய குடியரசு சார்பில் இம்முன்னோடிக் கருத்திட்டத்தை கண்காணிக்கும் நிறுவனமாக *Korea Institute for Advancement of Technology* நிறுவனம் செயலாற்றும். அதற்கமைய எட்டப்பட்டுள்ள உடன்பாடுகளுக்கமைய, குறித்த முன்னோடிக் கருத்திட்டத்தை ஆரம்பித்து நடைமுறைப்படுத்துவதற்காக கொரிய குடியரசின் *Korea Institute for Advancement of Technology* நிறுவனம், மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் மற்றும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கும் இடையே கலந்துரையாடல் குறிப்பில் கையொப்பமிடுவதற்காக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 03. திருத்தப்பட்ட ஒழுங்குவிதிகள்

1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட 1981.01.23 அதிகதிய அரச வர்த்தமானி இலக்கம் 125 இல் வெளியிடப்பட்ட ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டம் திருத்தப்பட்டு உருவாக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் 2311ஃ39 ஆம் இலக்க 2022.12.22 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த திருத்தப்பட்ட ஒழுங்குவிதிகளை பாராளுமன்ற அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பதற்காக நிதி, பொருளாதா உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 04. இயலாமையுடன் கூடிய நபர்களின் உரிமைகள் தொடர்பான சட்டமூலம்

இயலாமையுடன் கூடிய நபர்களின் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் சமவாயத்தில் இலங்கை அரசு 2016 ஆம் ஆண்டில் கையொப்பமிட்டுள்ளது. குறித்த சமவாயத்தின் 04 ஆவது உறுப்புரைக்கமைய இயலாமைத்தன்மையை அடிப்படையாகக் கொண்டு எவ்வித பாகுபாடுகளின்றி சகல இயலாமையுடன் கூடிய நபர்களின் அனைத்துவித மனித உரிமைகள் மற்றும் அடிப்படைச் சுதந்திரத்தை உறுதிப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல் போன்றவற்றை அரசு மேற்கொள்ள வேண்டியுள்ளது.

அதுதொடர்பான அடிப்படைச் சட்டமூலத்தைத் தயாரிப்பதற்காக பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, 1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இயலாமையுடன் கூடிய நபர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் சட்டத்தை முடிவுறுத்தி புதிய சட்டமொன்றை அறிமுகப்படுத்தவும், மேற்படி குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆரம்ப சட்டவரைபை அடிப்படையாகக் கொண்டு குறித்த கருமங்களுக்கான புதிய சட்டமூலத்தைத் தயாரிப்பதற்கு ஆலோசனை வழங்குவதற்காகவும், மகளிர், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சராக கௌரவ ஜனாதிபதியும் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரும் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 05. சட்டத்தைத் திருத்தம் செய்தல்

உள்ளூர் விமான சேவையின் பாதுகாப்புக்கு ஏற்புடையதான சட்ட வரையறைகளைப் புதுப்பித்தல், பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்தல், மற்றும் உள்ளூர் விமான சேவைகளுக்கான பொறுப்பு வரையறைகளை அடையாளங் காண்பதற்காக 2018 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க வானூர்தி மூலம் ஏற்றிச் செல்லல் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக 2022.08.22 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள வானூர்தி மூலம் ஏற்றிச் செல்லல் (திருத்தப்பட்ட) சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கிகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும் துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 06. ஊழல் எதிர்ப்பு சட்டமூலம்

ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தைத் தயாரிப்பதற்காக 2022.07.18 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள குறித்த சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. அதற்கமைய, ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கிகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.



இந்தியாவுக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில்

# அவுஸ்திரேலியாவுக்கு தலைமை தாங்கவுள்ள ஸ்டீவன் ஸ்மித்

இந்தியாவுக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில் அவுஸ்திரேலியாவுக்கு ஸ்டீவன் ஸ்மித் தலைமை தாங்கவுள்ளார்.

அணித்தலைவர் பற் கமின்ஸின் தாயார் கடந்த வாரம் இறந்தமையையடுத்து அவர் தொடர்ந்தும் அவுஸ்திரேலியாவிலுள்ள நிலையிலேயே ஸ்மித் அவுஸ்திரேலியாவுக்கு தலைமை தாங்கவுள்ளார்.

குழாமில் கமின்ஸை எவரைக் கொண்டும் பிரதியிடப்படவில்லை.



ஆப்கானிஸ்தானுக்கு எதிரான தொடரில்

## பாபர், றிஸ்வான், ஷகீனுக்கு ஓய்வு

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான இருபதுக்கு -20 தொடரில் அணித்தலைவர் பாபர் அஸாம், மொஹமட் றிஸ்வான், ஷகீன் ஷா அஃப்ரிடி, பக்கர் ஸமன், ஹரிஸ் றாஃப் ஆகியோருக்கு ஓய்வளிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குழாமுக்கு இமாட் வஸீம் மீள அழைக்கப்பட்டுள்ள நிலையில் ஷடாப் கான் அணித்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

குழாம்: ஷண் மசூட், சமிம் அயூப், மொஹமட் ஹரிஸ், அப்துல்லாஹ் ஷஃபிக், தயப் தஹிர், அஸாம் கான், இஃப்திஹார் அஹ்மட், ஷடாப் கான் (அணித்தலைவர்), மொஹமட் நவாஸ், இமாட் வஸிம், பாஹீம் அஷ்ரஃப், இஷனுல்லாஹ், மொஹமட் வஸிம், நசீம் ஷா, ஸமன் கான்.

மேலதிக வீரர்கள்: அப்ரார் அஹ்மட், ஹசீபுல்லாஹ், உஸாமா மிர்.



அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில்

## ஷ்ரேயாஸ் ஐயர் சந்தேகம்

அவுஸ்திரேலியாவுக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில் ஷ்ரேயாஸ் ஐயர் பங்கேற்பது சந்தேகத்துக்கிடமாகியுள்ளது.

மீண்டும் முதுகுப் பகுதி உபாதையேற்பட்ட ஐயர், தேசிய கிரிக்கெட் அகடமியிலுள்ள இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் மருத்துவ அணியின் கண்காணிப்பின் கீழ் காணப்படுகிறார்.

ஐயரைப் பெரும்பாலும் குழாமில் ரஜாட் பட்டிடார் பிரதியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.



இலங்கைக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடருக்கான

## நியூசிலாந்துக் குழாமில் வில்லியம்ஸன், சௌதி இல்லை

இலங்கைக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடருக்கான நியூசிலாந்துக் குழாமில் கேன் வில்லியம்ஸன், டிம் சௌதி, டெவோன் கொன்வே, மிற்செல் சான்ட்னெர் ஆகியோர் இடம்பெறவில்லை.

இதேவேளை, பின் அலென், லொக்கி பெர்கியூசன், கிளென் பிலிப்ஸ் ஆகியோர் முதலாவது போட்டியைத் தொடர்ந்து இந்தியாவுக்குச் செல்கின்றனர்.

குழாம்: டொம் லேதம் (அணித்தலைவர்), அலென், பிளென்டல், சட் போவ்ஸ், பிறேஸ்வெல், மார்க் சப்மன், பெர்கியூசன், ஹென்றி, பென் லிஸ்டர், டரைல் மிற்செல், ஹென்றி நிக்கொல்ஸ், கிளென் பிலிப்ஸ், ஹென்றி ஷிப்லி, இஷ் சோதி, பிளையர் டிக்னர், வில் யங்.



கராத்தே தொடரில்

## கிழக்கு யூ.எஸ். கே.யூ மாணவர்கள் சாதனை

அஸ்ஹர் இப்றாஹிம்

அநுராதபுரம் அன்றுவ் குமாரகே உள்ளக விளையாட்டரங்கில் சோட்டோகான் கராத்தே டூ ஜப்பான் ஸ்கூல் ஏற்பாட்டில் நடாத்தப்பட்ட 10ஆவது திறந்த கராத்தே சம்பியன்ஷிப் போட்டியில் இலங்கை சார்பாக கிழக்கு மாகாண யூ.எஸ்.கே.யூ. கராத்தே சங்கத்தின் ஓட்டமாவடி, வாழைச்சேனை எஸ்.கே.எம்.எஸ். மாணவர்களும் கலந்துகொண்டனர்.

ஆண்களுக்கான சிரேஷ்ட, கனிஷ்ட பிரிவின் கீழ் பங்குபற்றி 11 தங்கப் பதக்கங்கள், ஆறு வெள்ளிப் பதக்கங்கள், ஏழு வெண்கலப் பதக்கங்கள் உட்பட 24 பதக்கங்களைப் பெற்று பல்வேறு சாதனைகளைப் புரிந்துள்ளனர்.

இப்போட்டியில் இலங்கை, இந்தியா, நேபாளம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த வீர, வீராங்கனைகள் பங்கேற்றனர்.

ஈரான்

# 22,000 பேருக்கு பொதுமன்னிப்பு

ஈரானில் அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்திய 22,000 பேருக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.


`ஈரானில் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் ஹிஜாப்பினை முறையாக அணியவில்லை` எனக் கூறி கைது செய்யப்பட்ட ‘மஹ்சா அமினி‘ என்ற இளம்பெண் பொலிஸார் தாக்கியதில் உயிரிழந்தார்.

இச்சம்பவமானது உலகளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்த நிலையில், ஈரான் அரசுக்கு எதிராக ஆயிரக்கணக்கானோர் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து போராட்டங்களில் ஈடுபட்ட ஆயிரக்கணக்கானோர் ஈரான் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.



இந்நிலையில் அந்நாட்டு நீதித்துறை தலைவர் விடுத்துள்ள அறிக்கையில், அடுத்த வாரம் ரம்ஜான் நோன்பு தொடங்க உள்ள நிலையில் 22,000 க்கும் மேற்பட்டவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்க ஈரான் மதத் தலைவர் கொமேனி உத்தரவிட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.



ரஷ்யா

## முதலிடத்தில் ‘புட்டின்‘


உலகின் பணக்கார அரசியல் தலைவர்களின் பட்டியலில் ரஷ்ய ஜனாதிபதி புட்டின் தொடர்ந்தும் முதலிடத்தை தக்க வைத்து வருகின்றார்.

தனியார் நிறுவனமொன்று வெளியிட்ட தகவலின்படி இவருடைய சொத்து மதிப்பு 70 முதல் 200 பில்லியன் டொலர்கள் இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது. எனினும் இது தொடர்பான அதிகாரப்பூர்வத் தகவல் எதுவும் வெளியாகவில்லை.

ரஷ்யாவில் காணப்படும் எண்ணெய் வளங்களே, சர்வதேச அளவில் இவரின் செல்வாக்கு உயர்வதற்கும், இவரின் சொத்து மதிப்பிற்கும் முக்கிய காரணியாக விளங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யா

## கதறும் ரஷ்யப் பெண்கள்: கண்டுகொள்ளாத அரசு





நேட்டோ படையுடன் உக்ரேன் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, ரஷ்யா கடந்த ஒருவருடமாகஉக்ரேன் மீது தாக்குதல் நடத்தி வருகின்றது.

இப்போரில் இரு தரப்பில் இருந்தும் ஆயிரக்கணக்கான வீரர்கள் உயிரிழந்துள்ள நிலையில், உக்ரேனுக்காக நாட்டில் உள்ள தகுதியான ஆண்கள் அனைவரும் நிச்சயமாக போர் புரியவேண்டும் எனவும் அதற்கான பயிற்சிகள் முறையாக வழங்கப்படும் எனவும் புட்டின் தலைமையிலான ரஷ்ய அரசு தெரிவித்திருந்தது.

இந்நிலையில், தங்களது குடும்பத்து ஆண்களைப் போரில் பங்கேற்குமாறு புட்டின் அரசு வற்புறுத்துவதாகவும், முறையான பயிற்சிகள் கூட வழங்காமல் “படுகொலை”க்கு தள்ளுவதாகவும் ரஷ்ய பெண்கள், குற்றம் சாட்டியுள்ளனர்.

மேலும் ”இத்தகைய நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அரியலூர்

## ‘அனிதா’ வுக்கு கௌரவம்



நீட் தேர்வை எதிர்த்துப் போராடிய அரியலூர் மாணவி ‘அனிதா‘ கடந்த 2017ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1ஆம் திகதி மனவிரக்தியில் தனது உயிரை மாய்த்துக் கொண்டார்.

அவரது மரணம் தமிழ்நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில் சுமார் 22 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள, அரியலூர் அரச மருத்துவக்கல்லூரியின் அரங்கிற்கு முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அண்மையில் ‘அனிதா’ என்ற பெயரை சூட்டியுள்ளார்.

குறித்த நினைவு அரங்கம் சுமார் 850 பேர் அமரக்கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

தாம்பரம்

## காதலர்களைக் குறிவைக்கும் பொலிஸார்

### தாம்பரத்தில் அதிர்ச்சி

மணிமங்கலம் பகுதியில் காதலர்களை மிரட்டி பொலிஸார் பணம் பறித்து வந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சென்னை தாம்பரம் அடுத்த மணிமங்கலம் பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்டுவந்த இரு பொலிஸ் அதிகாரிகளே இவ்வாறு காதலர்களைக் குறிவைத்து பணம் பறித்து வந்துள்ளனர்.

இந்நிலையில் குறித்த பொலிஸ் அதிகாரிகளால் பாதிக்கப்பட்ட கிருஷ்ணன் என்பவர் இது குறித்து அளித்த புகாரின் அடிப்படையிலேயே இச்சம்பவம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

கிருஷ்ணன் கொடுத்த புகாரில் ”நானும், நான் திருமணம் செய்யவுள்ள பெண்ணும் அண்மையில் காரில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தோம். அப்பொழுது அவ்வழியாக வந்த பொலிஸார் எங்கள் மீது சந்தேகம் இருப்பதாகக் கூறியதோடு, எங்களை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரிக்க வேண்டும் என்றும் மிரட்டும் தொணியில் பேசினர்.

பொலிஸ் நிலையத்துக்கு எல்லாம் வேண்டாம் எனக் கூறினோம். அதற்கு அவர்கள் 10,000 ரூபாய் கொடுத்தால் விட்டு விடுவதாகத் தெரிவித்துள்ளனர்.

எங்களிடம் 4 000ரூபாய் தான் உள்ளது எனத் தெரிவித்ததால், ஜி.பே மூலம் குறித்த பணத்தை லஞ்சமாக பெற்றுவிட்டு அவர்கள் சென்றுவிட்டனர்” இவ்வாறு குறிப்பிட்டிருந்தனர்.



குந்தாப்புரா

## திடீரெனத் தென்பட்ட ‘லிங்க முத்திரைக் கல்‘

குந்தாப்புரா அருகே பூங்காவில் 400 ஆண்டுகள் பழமையான லிங்க முத்திரை கல் கண்டெடுக்கப்பட்டுள்ளமை அப்பகுதி மக்கள் மத்தியில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

உடுப்பி மாவட்டம் குந்தாப்புரா தாலுகா பஸ்ரூர் கிராமத்தில் அசோகா பூங்கா உள்ளது. இப்பூங்காவைச் சீரமைக்கும் பணியானது அண்மையில் நடைபெற்றபோது அங்கு பழங்கால கல் ஒன்று இருப்பது தெரியவந்தது.

அக்கல்லில் சூரியன், சந்திரன், சிவலிங்க முத்திரை, நந்தி உள்ளிட்ட வடிவங்கள் இருந்தன. இதுகுறித்து தொல்லியல் துறை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

அதன்பேரில் அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து பார்வையிட்டனர். அப்போது அக் கல்லானது 400 ஆண்டுகள் பழமையான லிங்க முத்திரை கல் என்பது தெரியவந்தது. ஆனால் எந்த மன்னர் காலத்து கல் என்பது தெரியவில்லை. இதையடுத்து தொல்லியல் துறை அதிகாரிகள் அக் கல்லை ஆய்வுக்காக எடுத்துச் சென்றுள்ளனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 15 மார்ச் 2023, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.